வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 02.09.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 267 பக்கங்கள் : 16

# இலங்கையை பொறுப்புக்கூற வைப்பதில் உறுதியாகவுள்ளேன்

## பிரித்தானியா பிரதமர் வேட்பாளர் ட்ரஸ் அம்மையார்

கொழும்பு, செப். 02
"நான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் உறுதியாக இருக்கிறேன்."

- இவ்வாறு பிரித்தானியாவை ஆளும் கன்சர்வேர்ட்டிவ் கட்சியின் பிரதமர் வேட்பாளரான லிஸ் ட்ரஸ் அம்மையார் உறுதியளித்துள்ளார்.

பிரித்தானியா தமிழ் கன்சவேர்ட்டிவ் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேந்திரனுடனான சந்திப்பிலேயே அவர் மேற்படி உறுதிமொழியை வழங்கினார்.

இந்த சந்திப்பின் போது, "இலங்கை தமிழர்கள் நீண்ட 15





# விபத்தில் இளைஞர் பலி!

மட்டக்களப்பு, செப். 02
இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சந்திவெளி பிரதான வீதியில் நேற்று பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் கிரான் - கோரகல்லிமடு - முருகன் கோவில் வீதியை சேர்ந்த 21 வயதுடைய ஜீவரெத்தினம் சனுஜன் என்பவரே உயிரிழந்தார். 15

# இலங்கைக்கான ஆதரவு தொடரும்!

## சீனா அறிவிப்பு

கொழும்பு, செப். 02
இலங்கையின் நட்பு நாடு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்னணி பங்குதாரர் என்ற வகையில் இலங்கைக்கு உதவ சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களை சீனா எப்போதும் ஊக்குவிக்கும் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி 15

# 290 கோடி டொலர் வழங்க நாணய நிதியம் இணக்கம்!

கொழும்பு, செப். 02

**பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்காக 290 கோடி டொலர் களை கடனாக வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) இணக்கம் தெரிவித்துள்ளது.**

நாட்டின் அதிகாரிகளும், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளும் இணைந்து உடன்படிக்கை மூலமாக இந்தக் கடன் இணக்கப்பாட்டை எட்டினர். இந்தக் கடன் தொகை 48 மாதங்களுக்கு - அதாவது 4 வருடங்களுக்கானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பீற்றர் ப்ரேயர், மசாஹிரோ நொசாகி தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந் தித்து கலந்துரை யாடினர்.

இதன் முடிவில் அவர்கள் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர். அந்த அறிக் கையிலேயே இலங்கைக்கு கடன் வழங்கு வதற்கான இணக்கம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது. 15



# நாளை நாடு திரும்புகிறார் கோட்டாபய ராஜபக்ஷ?

கொழும்பு, செப். 02
முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை சனிக்கிழமை நாடு திரும்புகிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய் துள்ளார் என்றும் கூறப்பட்டது. 15

# சாவகச்சேரி நீதிமன்றிலிருந்து இரு கைதிகள் தப்பியோட்டம்!

தென்மராட்சி, செப். 02
சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் இருந்து இரண்டு சந்தேக நபர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

போதைப் பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், நீதிமன்ற வளாகத்தில் சிறைக்காவலர்களின் பாதுகாப்பில் இருந்து அவர்கள் இருவரும் தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடியவர்களில் ஒருவர் மீளவும் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# கடன் மறுசீரமைப்புக்கு நாடுகள் மறுத்தால் நெருக்கடி அதிகரிக்கும்!

## சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 02
மறுசீரமைப்பு விடயத்தில் இலங்கைக்கு கடன் வழங்கியவர்கள் இணங்க மறுத்தால் நெருக்கடி தீவிரமடையும் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனா மேற்கத்தைய நாடுகளுடன் இணைந்து செயல்படாது என்ற பார்வைகளுக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதிய அதிகாரியொருவர் இதனை தெரிவித்துள்ளார்.

எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியம் 290 15

# அரச பயங்கரவாதத்தை நிறுத்த சர்வதேசம் தலையிட வேண்டும்!

## இப்படி கேட்கிறார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

கொழும்பு, செப். 02
"சர்வதேச சமூகம் தலையிட்டு அரச பயங்கரவாதத்தை நிறுத்தவும், மக்களை கைது செய்வதை நிறுத்தவும் வேண்டும்", என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம். பி. தெரிவித்துள்ளார்.



நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றில் நடைபெற்ற வரவு - செலவு திட்ட விவாதத்தின்போது பேசிய அவர், "தேசிய பாதுகாப்பு - 2030" என்ற பாதுகாப்பு மூலோபாயத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் 15

# பிரச்னைகளுக்கான தீர்வை யாழ்ப்பாணத்தில் பேசலாம்!

## புலம்பெயர் மக்களை அழைக்கிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, செப். 02
பிரச்னைகளை தீர்ப்பதற்கான கூட்டங்களை யாழ்ப்பாணத்திலேயே நடத்த வருமாறு புலம்பெயர்ந்த மக்களை அழைத்துள்ளேன். எங்கள் பிரச்னைகளை நாமே



தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன் - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், பயங்கரவாத பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15

## இப்படியும் நடக்கிறது...!

சிவாஜிலிங்கம் பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கின்றேன். அவரின் நடவடிக்கைகள் பற்றி பலரும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தாலும், அவர் தான் செய்கின்ற எந்தக் காரியத்தையும் நம்பிக்கையுடனும் உறுதியுடனுமே செய்பவர்.

ஹிலாரி கிளின்ரன் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடையவேண்டும் என்பதற்காக நல்லூரில் அவர் தேங்காய் உடைத்ததும் இவரின் நம்பிக்கையின் வெளிப்பாடுதான். அவர் வெற்றிபெற்றால் அது தமிழர்களுக்கு நன்மையளிக்கும் என்று அவர் நம்பினார். தான் நல்லூரானுக்கு நேர்த்திக்கடன் செய்தால் அவர் வெற்றிபெறு வார் என்றும் நம்பினார். - அதாவது இவை எல்லாம் அவரின் நம்பிக்கையின் வெளிப்பாடுதான்.

அவர் ஊடகங்களில் செய்திகள் வரவேண்டும் என்பதற்காக படம் காட்டுபவரல்ல.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான இறுதி யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, பாராளுமன்றில் இருந்த இருபத்தி இரண்டு எம்.பிக்களில் இருபது பேர் எங்கே இருந்தார்கள் என்பது அவர்களுக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி. ஆனால், அப்போது எம். பியாக இருந்த சிவாஜிலிங்கமும் சிறீகாந்தாவும் மாத்திரமே யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்றும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை காப்பாற்ற வேண்டும் எனவும் இந்தியாவில் நின்றுகொண்டு ஓடி ஓடி தலைவர்களை சந்தித்து கோரிக்கைகளை விடுத்துக் கொண்டிருந்தார்கள்.

சிவாஜிலிங்கம் பிரிட்டனுக்கு வந்து பிரிட்டன் பாராளுமன்றத் துக்கு முன்பாக நடந்துகொண்டிருந்த போராட்டங்களிலும் கலந்துகொண்டு யுத்தத்தை நிறுத்த தன்னாலான முயற்சிகளை செய்துகொண்டிருந்தவர்.

இப்போதும் தமிழ் மக்கள் அன்றைய நிலையில் அநாதைகள் போலவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதினாரோ தெரியவில்லை, தமிழகத்தில் தங்கியிருந்துகொண்டு ஓடி ஓடி தலைவர்களையும் தமிழ் இனப்பற்றாளர்களையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்.

ஈழத் தமிழர் ஆயுதப் போராட்ட ஆரம்பகாலத்திலிருந்து அதனோடு பயணித்துக் கொண்டிருப்பவர் தமிழக ஊடகவியலாளர் பகவான் சிங். அவரை 'ஈழநாடு' வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

இந்த பகவான் சிங்கையும் அண்மையில் சந்தித்தார் சிவாஜிலிங்கம். அவரை பகவான்சிங் ஈழநாடுவுக்காக ஒரு பேட்டி எடுத்திருந்ததுடன், அதன் ஒலி வடிவத்தையும் அனுப்பியிருந்தார். அந்தப் பேட்டியை ஈழநாடு வாசகர்கள் படிக்கக்கூடியதாக இருக்கும்.

ஆனால், அந்தப் பேட்டி முடிவடைந்த பின்னர் இருவரும் சில விடயங்களை பேசிக்கொண்டிருப்பதும் அந்த ஒலிப்பதிவில் இடம் பெற்றிருந்தது. அதனைக் கேட்கின்ற சந்தர்ப்பம் இந்த ஊர்க்குருவிக்குக் கிடைத்தது.

அந்த சம்பாஷணையில் சிவாஜிலிங்கம் முன்வைக்கும் கருத்து ஒன்றே இந்தப் பத்தியை எழுதவேண்டும் என்ற யோசனையை உருவாக்கியது என்பதையும் சொல்லி வைக்கவேண்டும்.

அந்த சம்பாஷணையில், கூட்டமைப்பின் பேச்சாளர் என்று அறியப்பட்டவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் குறித்து அவர் உரையாடுகின்ற விடயம் எத்தனை யதார்த்தமானது என்பதை இங்கே குறிப்பிடவேண்டும்.

சுமந்திரன் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும், அவரின் கடின உழைப்பு, ஓடி ஓடி அவர் இராஜதந்திரிகளை சந்திப்பதையும் தொடர்ச்சியாக எதையாவது செய்து கொண்டிருப்பதையும் விதந்து குறிப்பிடும் சிவாஜிலிங்கம், மற்றையவர்கள் சுமந்திரன் மீது குறைகூறிக் கொண்டு மட்டும் இருக்காமல் தாங்களும் அவரைப்போல கடுமையாக ஏன் உழைக்கிறார்கள் இல்லை என்ற தனது ஆதங்கத்தை சிவாஜி முன்வைக்கின்றார்.

நல்லாட்சி காலத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஜெனிவாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்றுவந்தபோதிலும் யாரின் நலனைக் கவனித்தார்கள் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

ஜெனிவாவின் ஊடாக நல்லாட்சி அரசாங்கத்துக்கு அல்லது ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி வந்துவிடக்கூடாது என்பதற்காகவே ஓடிஓடி உழைத்தவர்கள். அதனால்தான் இறுதி யுத்தத்தில் நடந்தவை பற்றிய சர்வதேச விசாரணையே நடந்து முடிந்துவிட்டது என்றுகூட வாதிட்டவர்கள்.

கூட்டமைப்பின் சார்பில் இராஜதந்திரிகளையும் ஜெனிவாவையும் அணுகுகின்றவர்கள் யாரைப் பாதுகாக்க முயன்றார்கள் என்பதும் இரகசியமானதல்ல.

சுமந்திரன் போன்று மற்றவர்கள் ஏன் தமக்கிருக்கும் அநுகூலங்க ளைப் பயன்படுத்தி இராஜதந்திரிகளை சந்தித்து தமிழ் மக்களின் உண்மையான நிலைமையை எடுத்துக்கூறக்கூடாது. அதற்கான முயற்சியை தாங்கள் எடுக்காமல் இருந்துகொண்டு மற்றவர்களை குறைகூறுவதிலோ அல்லது குற்றம் கண்டுபிடிப்பதிலோ காலத்தை கடத்துகிறார்கள் என்ற சிவாஜிலிங்கத்தின் குற்றச்சாட்டு நியாயமானதாகவே தெரிந்தது.

இப்போது ரெலோ கட்சியின் ஏற்பாட்டில் சில முயற்சிகள் நடந்தாலும் அது இன்னும் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போது தான் இராஜதந்திரிகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உண்மையான பிரச்னைகள் தெரியவரும்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது பிரிட்ட னின் பொதுநலவாய அமைச்சர் இலங்கை வந்திருந்தார். அப்போது அவர், "கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது இருந்தது போல அல்ல, இப்போது மனித உரிமைகள் விடயங்களில் நல்ல முன்னேற்றம் இருக்கிறது" என்று பாராட்டுப்பத்திரம் வழங்கியமை ஞாபகமிருக்கலாம். அதே அமைச்சர் இலங்கை வருவதற்கு முன்னர் நமது தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படும் இருவர் அவரை சந்தித்திருந்தார்கள்.

அதற்கு பின்னரும் அவர் இலங்கை வந்து கோட்டாபயவுக்கு சான்றுப் பத்திரம்தான் வழங்கினார் என்றால் நமது பிரசாரத்தின் ஆழத்தை அறியலாம்.

சிவாஜிலிங்கத்தின் கரிசனையை மற்றைய தமிழ் பிரதிநிதிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**- ஊர்க்குருவி**

# வடக்கில் சீன ஆதிக்கத்தை ஒருபோதும் ஏற்கமுடியாது!

## செல்வம் எம்.பி. திட்டவட்டம்

வவுனியா, செப். 02

வடக்கிலே சீனாவின் ஆதிக் கத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

அண்மைக்காலமாக சீனாவி னுடைய கப்பல் ஒரு சர்ச்சை யாக இலங்கையிலே பேசப்பட்டது. இந்தியாவின் பாதுகாப்பு பங்கம் விளைவிக்கும் எச்சரிக் கையை மீறி அரசாங்கம் சீனக் கப்பலை உள்ளே அனுமதித் தது. தற்போது மீண்டும் சீனா வின் ஆதிக்கம் தொடர்வதா கவே நாங்கள் பார்க்கின்றோம்.

அந்தவகையிலே வடக்கில் சீனாவின் பிரதிநிதிகள், அவர் களுடைய முகவர்கள் கூடுதலாக களம் இறக்கப்பட்டிருக் கின்றனர். அட்டைப்பண்ணை, இறால் பண்ணை இவ்வாறு அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களை அதற்குள்ளே சிக்க வைத்து இந்தியாவுக்கு எதிரானவர்களாகக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை சீனா செய்கின்றது.

அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அயல் நாடான இந்தியாவின் பாதுகாப்பைத் தமிழர்கள் பாதுகாக்கவேண் டும் என்பது எங்கள் கடமையாக இருக்கின்றது. ஏனென் றால் கரையோர பகுதியில் இருப்பது தமிழர்களே.

வடக்கில் குறிப்பாக கரை யோரப் பிரதேசங்களில் சீனா வின் கால் பதிப்பை அனுமதிக்க முடியாது - என்றார். (அ)

# வர்த்தக நிலையங்களுக்கு எதிரான வழக்கு; 16 லட்சத்து 33 ஆயிரம் ரூபா தண்டம் அறவீடு

வவுனியா, செப். 02

வவுனியா மாவட்டத்தில் இவ் வருடம் வர்த்தக நிலையங் களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட வழக்குகளில் 16 இலட் சத்து 33 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி அ.லெ.ஜெபர்ஷாதிக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் இவ் வருடத்தில் பல சுற்றி வளைப்புகளையும், சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தோம். இவ் வருடம் ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 322 வழக்குகள் பிடிக்கப்பட்டுள்ளதுடன் 292 வழக்குகள் பதியப்பட்டு 16,33,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாதம் 48 வழக்குகள் பிடிக்கப்பட்டு 37 வழக்குகள் பதியப்பட்டதுடன், 1,51,500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்குகளில் நுகர் வோர் சட்டத்தை மீறிய காலா வதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைபத்திரத்தை காட்சிப்படுத்தாது பொருட்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையை மீறி பொருட்களை விற்பனை செய்தமை, பொருட் களை பதுக்கி வைத்திருந்தமை போன்ற பல்வேறு செயற்பாடுகளிற்காக பிடிக்கப்பட்டுள்ளதாகவும், பழைய பொருட்களுக்கு விலையை மாற்றம் செய்து விற் பனை செய்தமை தற்காலத்தில் அதிக வழக்கு பதிவு செய்யப்பட்டன - என்றார். (அ)

# கிளிநொச்சி நகர எல்லையை மீள்வரையறை செய்யவேண்டும்!

யாழ்ப்பாணம், செப். 02

கிளிநொச்சி நகர சபை எல்லை வரையறை தொடர்பில் பொதுமக்கள் மற்றும் அமைப்புகளுடன் கலந்துரையாடி அதனை மீள்வரையறை செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. அருந்தவபாலன் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

முன்மொழியப்பட்டுள்ள கிளிநொச்சி நகர சபை எல்லை வரையறை தொடர்பாக அந்த நகரத்தில் வாழ்கின்ற ஒரு பகுதி மக்கள் தமது கவலைகளையும் ஆட்சேபனைகளையும் தெரிவித்து வருகின்றனர்.

நகரத்தை அண்மித்துள்ள சிலபகுதிகள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ள, அதேவேளை 5 கி. மீ தூரம் வரையான பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் புறக்கணிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்பின் தென்னிலங்கையிலும் மலைநாட்டிலிருந்தும் வந்து குடியேறிய மக்கள் அதிகமாக வாழ்ந்து வருவதால்தான் புறக்கணிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

மேலும், எல்லைகள் வரையறுக்கப்பட்ட போது மக்களுடனோ அங்குள்ள பொது அமைப்புகளுடனோ எவ்வித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. எனவே, இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய காரணங்களையும் நியாயங் களையும் தெளிவுபடுத்த வேண்டும். தவறுத லாகவோ அன்றி வேண்டுமென்றோ அவ் வாறு நடைபெற்றிருந்தால் காலதாமதமின்றி எல்லைகளை மீள்வரையறை செய்ய நட வடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# ம.எண்ணெய் நிவாரணத்துக்கு நிதி ஒதுக்கவில்லை!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 02

கஷ்டப்படுகின்ற விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம் தொடர்பில், வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிவு தரப்பட்டுள்ளபோதும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போது எம்.ஏ சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் தற்போது, உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவாமல், உயர்தர வர்க்கத்தினரையும், மத்திய தர வர்க்கத்தினரையும் அமைதிப்படுத்த முயல்கிறது.

இதற்காகவே பெற்றோல் விநியோகத்தை அது ஊக்கப்படுத்தி வருகிறது. மறுபுறத்தில் போராட்டங்கள் இடம்பெறும்போது அதனை பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு அடக்கமுயல்கிறது.

500 பேர் போராட்டம் நடத்தினால், அதனை அடக்குவதற்கு ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்த நிலையில், சாதாரணமாக ரணில் விக்கிரமசிங்க, அறிவித்தல்களில் ஆங்கிலத்தில் கையொப்பம் இடுகின்றபோதும், போராட்டத்தில் ஈடுபட்ட மூன்று பேரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைப்பதற்கான ஆவணத்தில் அவர் சிங்களத்தில் ஒப்பமிட்டுள்ளார் என்றும் அவர் கூறினார். (ஐ-2)

ஈழநாடு
Eelanadu
02.09.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## நமது தர்க்கரீதியான பங்காளி யார்?

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட இந்தியாவை ஒரு தர்க்க ரீதியான (logical partner) பங்காளியென வர்ணித்திருக்கின்றார். இந்தியாவே இந்த பிராந்தியத்தின் பாதுகாப்புக்கான நங்கூரமென்றும் இந்தியாவும் கொழும்பும் பாதுகாப்பு தொடர்பில் பரந்தளவிலான வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டும் - அப்போதுதான் அண்மையில், அம்பாந்தோட்டையில் நங்கூரமிடப்பட்ட சீன கப்பல் விவகாரம் போன்ற பிரச்னைகளை கையாள முடியுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை மொறகொட குறிப்பிட்டிருக்கும் பிறிதொரு விடயம் முக்கியமானது. அதாவது, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய வகையில் இலங்கையின் நிலம் மற்றும் கடல் எல்லைகள் பயன்படுத்தப்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம் என்னும் விடயம் 1987ஆம் ஆண்டிலேயே உறுதிசெய்யப்பட்டிருப்பதாகவும் மொறகொட குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த விடயத்தின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்கு வருவோம். ஈழத் தமிழ் மக்களின் தர்க்கரீதியான பங்காளி யார்? ஈழத் தமிழ் மக்களின் பிரச்னையை ஓர் அரசியல் ரீதியான பிரச்னையாக அங்கீகரித்த தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஈழத் தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமென்று அங்கீகரித்த - அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்பதை ஏற்றுக்கொண்ட ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான். ஆனால், தமிழ் மக்களுக்கான தனிநாட்டு கோரிக்கையை இந்தியா ஆதரிக்கவில்லை – ஆதரிக்கவில்லை என்பதற்குமப்பால் அனுமதிக்கவில்லை. தமிழ் ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்த காலத்திலேயே இந்த விடயம் ஆயுத இயக்கங்களின் தலைவர்களுக்கு இந்திய தரப்பால் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் பின்புலத்தில்தான் 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்கு அரசியல் தீர்வை காண்பதுதான் அந்த ஒப்பந்தத்தின் பிரதான இலக்காகும். ஆனால், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக சட்டமாக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. ஒப்பந்தம் இடம்பெற்று 35 வருடங்களுக்கு பின்னரும் இப்போதும் இது பேசுபொருளாகவே இருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இந்திய - இலங்கை ஒப்பந்தம்தான் இப்போதும் புதுடில்லிக்கும் கொழும்புக்குமான தொடர்பாடலின் அத்திபாரமாக பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், எந்த மக்களின் பெயரால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதோ அந்த நோக்கம் இன்று வரையில் நிறைவேறவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழ் மக்களின் இனப்பிரச்னையை தீர்த்து வைக்கும் தர்க்கரீதியான பங்காளியாக இந்தியாவே இருந்திருக்க வேண்டும். ஆனால், நடைமுறையில் இது சிக்கலானதாகவே இருக்கின்றது. சிங்களவர்கள் இந்தியாவை தர்க்கரீதியான பங்காளியாகக் குறிப்பிட்டாலும்கூட அவர்கள் நெருக்கடியிலிருக்கும்போது மட்டும்தான் புதுடில்லியை திரும்பிப் பார்க்கின்றனர். ஆனால், ஈழத் தமிழர்களோ தமிழ் நாட்டோடு உள்ள தர்க்கரீதியான வரலாற்று தொடர்பாலும் உறவாலும் இந்தியாவையே பிரதானமாக நோக்கும் நிலையிலேயே இருக்கின்றனர். ஏனெனில், ஈழத் தமிழ் மக்கள் அரசற்ற மக்கள் கூட்டம். ஈழத் தமிழர்களுக்கான அரசாக தொழில்பட வேண்டிய நிலையில்தான் இந்தியா இருக்கின்றது. ஆனால், யுத்தம் நிறைவுற்று பன்னிரெண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும்கூட அரசியல் தீர்வு விடயத்தில் உருப்படியாக எதுவும் நிகழவில்லை. இந்தியா உச்சரித்துவரும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதிலும் முன்னேற்றங்கள் இடம்பெறவில்லை. 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி மாகாண சபைகள் சுயாதீனமாக - அதாவது, ஆளுநர்களின் தலையீடின்றி இயங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதில் இந்தியா அதன் தர்க்கரீதியான பங்காளி தகுதியை பிரயோகிக்க வேண்டும்.

# ஆட்டம் காணுகிறது அரசோச்சிய சிறீலங்கா பொதுஜன பெரமுன!

**அலசுவது இராஜதந்திரி**

*2018ஆம் ஆண்டு வீரியத்தோடு தோற்றம் பெற்ற சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தற்போது ஆட்டங்காண ஆரம்பித்துள்ளது. நேற்று முன்தினம் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும உட்பட சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் பாராளுமன்றில் எதிரணியில் சென்று அமர்ந்து சுயாதீனமாக செயல்படும் தமது முடிவை அறிவித்தனர்.*

*சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து அதன் முக்கிய உறுப்பினர்கள் விலகுவது இது முதல் தடவையல்ல. ஏற்கனவே பொதுஜன பெரமுனவின் ‘பிரசார பீரங்கி’யாக விளங்கிய விமல் வீரவன்ஸ தமது சகாக்கள் சிலரோடு அந்தக் கட்சியிலிருந்தும் விலகியிருந்தார்.*

*அத்துடன் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் பலர் ‘மெல்லவும் முடியாது. விழுங்கவும் முடியாது’ உட்கட்சிப்பூசல்களை சகித்து வந்திருந்தனர். இருந்தபோதிலும் பொறுமைக்கும் எல்லையுண்டு என்ற நிலையில் தற்போது பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேற ஆரம்பித்துள்ளனர்.*

*முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஸ்தாபித்திருந்தார். இதன்பின்னர், தமது சொந்த நலன்களை முதன்மைப்படுத்தி ராஜபக்ஷவினரின் குடும்ப அரசியல் கட்சி என்ற வகையில் அதனை வளர்த்தெடுத்தார். ஆனால், தற்போது ராஜபக்ஷவினரின் கொட்டம் வெகுவாக மக்கள் மீதிருந்து தோன்றிய எதிர்ப்பலைகள் காரணமாக அடக்கப்பட்டுள்ளது.*

*பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவும் அவரைத் தொடர்ந்து தெரிவான கோட்டாபய ராஜபக்ஷவும் மக்களின் எதிர்ப்பலையால் பதவி இறக்கத்துக்குள்ளான நிலையில் கடந்த சில வருடங்களாக பலம் படைத்திருந்த பொதுஜன பெரமுன கட்சி தற்சமயம் வலுவிழந்துள்ளதையே, அடுத்தடுத்து அக்கட்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் வெளியேற்றங்கள் என்பவை சுட்டிக்காட்டுகின்றன.*

*சிறீலங்கா பொதுஜன பெரமுனயிலிருந்து வெளியேறும் தமது தரப்பின் முடிவை தெரிவித்து பாராளுமன்றில் உரை நிகழ்த்திய பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தன்னிச்சையாக செயல்படுவதற்கு பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை என்று கூறியிருந்தார். இதன் மூலம் சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் நிலவிய எதேச்சதிகாரமான போக்கு எவ்வளவு தூரம் வலுவடைந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது. இதன் காரணமாகவே நாட்டில் தளம்பலான அரசியல் நிலை ஏற்பட்டிருந்ததோடு பொருளாதார நிலவரமும் அதலபாதாளத்தினுள் வீழ்ந்துள்ளது.*

*பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மேலும் கருத்து வெளியிட்டபோது பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்பட முன்வந்துள்ளபோதிலும், நாட்டு நலன் கருதி இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கின்ற ஆக்கபூர்வமான முடிவுகளை தமது தரப்பினர் ஆதரிப்பர் எனவும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டிருந்தார்.*

*பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளவற்றை நோக்கும்போது ஒருபுறம் தன்னிச்சையான போக்கு சிறீலங்கா பொதுஜன பெரமுனவில் இருப்பதோடு நாட்டு நலன் கருதிய அம்சங்கள் எதனையும் அக்கட்சி கொண்டிருக்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது.*

*இந்நிலையில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டவை அனைத்தும் அண்மையில் நாட்டில் அரசியல் மாற்றம், பொருளாதார மாற்றம் என்பவற்றை கோரி இடம்பெற்றிருந்த ‘அறகலய’ மக்கள் போராட்டத்தை வெகுவாகவே நியாயப்படுத்துபவையாகவும் அமைந்திருந்தன.*

*இக்கட்டத்திலேயே அந்நாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் “சிலரை சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது“ என்ற கூறியமை நிரூபணமாகியுள்ளதையும் நோக்க முடிகின்றது.*

*2009ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்றதுமே பொருளாதார ரீதியான முன்னேற்றத்துக்கு வழிவகைகளை தேடுவதை அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால், அவர் தனது சகோதரர்களையும் புதல்வர் நாமல் ராஜபக்ஷவையும் முன்னிலைப்படுத்தியதோடு தமது குடும்பத்தைச் சேர்ந்த பலரையும் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு துணைநிற்கும் வகையில் அரச நிறுவனங்கள் , கூட்டுத்தாபனங்களின் தலைவர்களாகவும் முக்கிய உறுப்பினர்களாகவும் நியமித்திருந்தார்.*

*எது எப்படியிருந்தபோதிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது மகாநாடு இடம்பெறுவதற்கு இன்னும் ஓரிரு வாரங்களே இருக்கும் தறுவாயில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து மேலும் பலர் வெளியேறியுள்ளமை இலங்கையில் ஒரு நேர்த்தியான அடிப்படை மனித உரிமைகளை மதிக்கின்ற போக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கடந்த காலங்களில் காணப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதாகவே இருக்கின்றது.*

*எனவே, புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு இத்தடவை ஜெனிவாவில் முன்னர் கொண்டு வரப்பட்ட இலங்கை குறித்த அனைத்து தீர்மானங்களையும் நிறைவேற்றுமாறு வலுவான கோரிக்கை விடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருதலாம். “பிச்சைக்காரனுக்கு தெரிவில்லை“ என்று கூறப்படுவதற்கமைவாக இலங்கைக்கும் ஜெனிவா தீர்மானங்களை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தமும் சர்வதேச சமூகத்தின மூலமாக ஏற்படமுடியும் என்றே கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



செப்ரெம்பர் - 02 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 17
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சப்தமி




**மேடம்**
பொருளாதார நிலை உயரும்.நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும்.நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**இடபம்**
எதிர்ப்புகள் விலகும். அலுவலகத்தில் இருந்த நெருக்கடி நீங்கும்.தடைகளை எல்லாம் சரி செய்து முன்னேற்றத்தைக் காண்பீர்கள். உடல் நிலையில் இருந்த பாதிப்புகள் விலகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள். நீண்ட நாள் பிரச்னை ஒன்றிற்கு முடிவு காண்பீர்கள்.

**கடகம்**
துணிச்சலுடன் செயல்பட்டு முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர்கள்.நெருக்கடிகள் நீங்கும். வழக்கு விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாகும். எதிர்பார்த்த வருமானம் உண்டு.

**சிம்மம்**
உங்களின் செல்வாக்கு உயரும். செயல்களில் ஆதாயம் அதிகரிக்கும்.அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்களின் திறமை வெளிப்படும்.

**கன்னி**
உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வரவுகளில் இருந்த தடை அகலும்.வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். எதிர்பார்த்த பண வரவு உண்டு.

**துலாம்**
உங்கள் விருப்பப்படி செயல்படுவீர்கள். குடும்பத்தினரின் நலனுக்கான ஒரு முடிவை துணிச்சலுடன் எடுப்பீர்கள். சக பணியாளர்களின் ஒத்துழைப்பால் உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம்.வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்து செல்வீர்கள்.குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத செலவு உண்டு.

**தனுசு**
நிதி நிலையில் இருந்த சங்கடம் நீங்கும். எதிர்பார்த்த பணம் வரும். திட்டமிட்டு செயல்பட்டு ஆதாயம் காண்பீர்கள். உங்களின் தேவைகள் நிறைவேறும்.நவீன பொருட்கள் வாங்குவீர்கள்.

**மகரம்**
தொழில், வியாபாரத்தில் ஏற்பட்டிருந்த பிரச்னைகளை சரி செய்வீர்கள். வியாபார போட்டியாளர்கள் விலகிச் செல்வர். பொருளாதார நிலை உயரும்.

**கும்பம்**
நிதிநிலை உயரும்.நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். நீங்கள் எதிர்பார்த்ததை அடைவீர்கள்.இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயம் உண்டு.

**மீனம்**
பேச்சிலும் செயலிலும் கவனம் தேவைப்படும். யோசித்து செயல்பட வேண்டிய நாள்.பிறரால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். நிதானத்துடன் செயல்பட வேண்டிய நாள். புதிய முயற்சிகள் எதுவும் இன்று வேண்டாம்.

*- திண்டுக்கல்லை மாதிரியாகக் கொண்டு தமிழகம் முழுவதும்-*

# இலங்கை தமிழ் அகதிகளுக்கு வீடுகள் நிர்மாணிக்க திட்டம்!

திண்டுக்கல், செப். 02

திண்டுக்கல்லில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமை மாதிரியாகக் கொண்டு, தமிழகம் முழுவதும் வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் அடுத்துள்ள தோட்டனூத்து ஊராட்சிப் பகுதியில், முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்காக 17.17 கோடி (இந்திய) ரூபாய் செலவில் 321 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கட்டுமானப் பணிகளை, தமிழக சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாட்டுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் கண்காணித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், திண்டுக்கலில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 321 வீடுகளை மாதிரியாகக் கொண்டு, தமிழகத்தின் பிற பகுதிகளிலுள்ள முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# முதல்வர் ஸ்டாலின்தான் மத அரசியல் செய்கிறார்!

## பாரதிய ஜனதா கட்சி சாடல்

சென்னை, செப். 01

"விநாயகர் சதுர்த்திக்கு முதல்வர் வாழ்த்து சொல்லாததன் மூலம், தமிழகத்தில் அவர்தான் மத அரசியல் செய்கிறார் என்பது மீண்டும் ஒருமுறை உறுதியாகி இருக்கிறது" என்று பாரதிய ஜனதா கட்சியின் (பா. ஜ. க.) மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.



சென்னையில் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர்,

"தமிழகத்தில் முதன்முறையாக விநாயகர் சதுர்த்திக்கு விடுமுறை அறிவித்த அரசு எது? வரலாற்றை புரட்டிப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். விநாயகர் சதுர்த்திக்கு முதன்முறையாக விடுமுறை அறிவித்தது தி. மு. க. அரசு, அப்போதைய முதல்வர் அண்ணாதான் அந்த அறிவிப்பை வெளியிட்டவர்.

இன்று தி. மு. க., பேரறிஞர் அண்ணா வகுத்த பாதையிலிருந்து எந்தளவுக்கு மாறியிருக்கிறது என்பதற்கு நமது முதல்வர் வாழ்த்து சொல்லாதது, தி. மு. கவைச் சாரந்த ஓர் எம். பி. இந்து சமய அறநிலையத்துறை அவர்களுடைய துறை சார்ந்து வாழ்த்து தெரிவித்ததற்கு எதிராக கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்மூலம் அண்ணா வழியில் வரக்கூடிய இந்த ஆட்சி எந்தளவுக்கு விலகியிருக்கிறது என்பது தெரிகிறது. இந்துசமய அறநிலையத்துறை வாழ்த்து தெரிவித்திருப்பது எந்தவிதத்திலும் தவறு கிடையாது. தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினும் வாழ்த்து கூறியிருக்க வேண்டும். காரணம் தமிழகத்தின் முதல்வராக அவர் தெரிவிக்கும் வாழ்த்து அனைவருக்கும் பொருந்தும்.

பா. ஜ. க. பண்டிகைகளைப் பொருத்தவரை இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என்று பிரித்துப் பார்ப்பது கிடையாது. வாழ்த்து சொல்வதால், பண்டிகை கொண்டாடும் மக்களுக்கு அந்த பண்டிகைகளின் மீது ஒரு பாந்தம் வருகிறது. இதனை முதல்வர் நேற்று (நேற்றுமுன்தினம்) செய்ய தவறியிருக்கிறார். இந்துசமய அறநிலையத்துறை வாழ்த்து கூறியதை தி. மு. க. எம்.பி. குறை கூறியிருப்பது அதைவிட பெரிய தவறு.


வாழ்த்து சொல்வது அரசியல் கிடையாது. வாழ்த்து சொல்வதால், இந்த சமுதாயத்தில் இருக்கின்ற ஒற்றுமை இன்னும் மேலோங்கிச் செல்கிறது. ஆனால், முதல்வரே வாழ்த்து சொல்லாதபோது, தமிழகத்தில் அவர்தான் மத அரசியல் செய்கிறார் என்பது மீண்டும் ஒருமுறை உறுதியாகிறது"- என்றார். (ஐ)

# பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதியுங்கள்

## நாம் தமிழர் சீமான் வலியுறுத்து

சென்னை, செப். 01

பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு அருகே கெங்கை சூடாமணியிலுள்ள தனியார் பள்ளியில் 4 வயது பெண்குழந்தை அரசுப்பள்ளி ஆசிரியரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியும், ஆழ்ந்த மனவேதனையும் அடைந்தேன்.

தாய்வழிச்சமூகமாக விளங்கிப் பெண்களுக்கு முதன்மைத்துவம் வழங்கிப் போற்றிக்கொண்டாடிய தமிழ்ச்சமூகத்தில், பெண் பிள்ளைகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிற இன்றைய கொடும் நிலை கண்டு வெட்கித் தலைகுனிகிறேன்.

குற்றச்சமூகமாக மாறிப்போன இச்சமூகத்தில் வாழும் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்தப் பெருங்கவலை என்னை வாட்டி வதைக்கிறது. பெண்களைப் போகப் பொருளாகக் காட்சிப்படுத்தும் திரைப்படங்கள், ஊடகங்கள், விளம்பரங்கள் முதல் கல்விமுறை, ஆண் பிள்ளைகளின் வளர்ப்பு முறைகள் வரை எல்லாவற்றிலும் மாற்றம் உருப்பெற வழிவகை செய்வதே இக்கொடுமைகளிலிருந்து நீங்குவதற்கான வழியாக அமையும்.

அரிதினும் அரிதான வழக்குகளில் வழங்கப்படும் மரண தண்டனையை பாலியல் வன்கொடுமைக் குற்றங்களுக்கான தண்டனையாக வரையறுத்து, அதற்கென தனிச்சட்டமியற்றி, தண்டனைகளைக் கடுமையாக்குவதே இக்குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான ஒரே வாய்ப்பாகும் - என்று கூறியுள்ளார். (ஐ)

# வற் வரி அதிகரிப்பு நேற்று முதல் அமுல்!

கொழும்பு, செப். 02

வற் வரி என்ற பெறுமதி சேர் வரி அதிகரிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பெறுமதி சேர் வரி 12 வீதத்திலிருந்து 15 வீதமாக உயர்த்தப்பட உள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் இடைக் கால வரவு செலவுத்திட்டமொன்றை சமர்ப்பித்திருந்தார்.

இதன்போது அவர், வற் வரியை அதிகரிப்பது குறித்த யோசனையை முன்மொழிந்திருந்தார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பை தொடர்ந்தே வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது வழமையானது.

எனினும், பெறுமதி சேர் வரி அதிகரிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மூன்று மாதங்களுக்குள் 26 பேர் சுட்டுக்கொலை!

கொழும்பு, செப். 02

இலங்கையில் கடந்த மே 30 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 26 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் - என்று பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதில் பாதாள குழுக்களுடன் தொடர்புடையவர்களுக்கு இடையில் காணப்பட்ட மோதல்களாலேயே அதிக துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நாட்டில் நேற்று முன்தினமும் இரு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். (அ)

# காணாமலாக்கப்பட்ட தமிழ் மக்கள் எங்கே?

## ஒன்ராறியோ மாகாண சபை முன் கவனயீர்ப்பு




ஒன்ராறியோ, செப். 02

**சிறிலங்கா அரசினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் எங்கே? என்ற கேள்வியுடன் கனடாவின் ஒன்ராறியோ மாகாண சபையின் முன்பாக காணாமலாக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.**

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளான ஆகஸ்ட்-30 செவ்வாயன்று இலங்கைத்தீவில் சிறிலங்கா அரசினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கோரி, தமிழர் தாயகம் உட்பட புலம்பெயர் நாடுகள் எங்கும் கவனயீர்ப்பு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

கடந்த 2 ஆயிரம் நாட்களுக்கு மேலாக காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என நீதி கோரி போராடும் தாயகத்து தாய்மார்களது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் புலம்பெயர் தேசங்களில் கவனீர்ப்புப் போராட்டங்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒருங்கிணைத்திருந்தது.

அந்தவகையில் கனடாவில் கனடா ஒன்ராறியோ மாகாண சபை முன்றிலில் ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தல் இடம்பெற்றது.

ஒன்ராறியோ மாகாணசபையில் தமிழினப்படு கொலை அறிவூட்டல் வார தீர்மானம் நிறைவேற் றலுக்கு முழுமையாக பணியாற்றியவர்களான மாகாணமன்ற உறுப்பினரும் கலாச்சார அமைச் சின் செயலருமான லோகன் கணபதி, மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ் ஆகியோர் கலந்து கொண்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக நீதிக்கான குரலை எழுப்பியிருந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட வேற்று இனத்தவர்கள் இந்த ஒளிப்படக் காட்சிப்படுத்தலை பார்த்தும், கேட்டும் அறிந்து கொண்டதுடன், தமது சமூக வலைத்தளங்களில் இதனை நேரடியாக பகிர்ந்து கொண்டமை நீதிக்கான போராட்டத்துக்கு நம்பிக்கையை தந்திருந்தது என நிகழ்வு ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர். (அ)

# அனைத்து கட்சிகளையும் உள்ளடங்கிய தேசிய சபையை அமைக்கச் சட்டமூலம்

## கூறுகிறார் பிரதமர் தினேஷ் குணவர்தன

கொழும்பு, செப். 02

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளையும் உள்ளடங்கிய தேசிய சபை ஒன்றை அமைப்பதற்கான நகல் சட்டமூல வரைவுக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இதுதொடர்பான நகல் சட்டமூலத்தை கட்சித்தலைவர்களிடம் முன்வைத்துள்ளார். பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் துறைசார் கண்காணிப்பு நிறைவேற்றுக்குழுக்களை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனை குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டது. இதன்போது கட்சித் தலைவர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர்.

பாராளுமன்றத்தில் கட்சிகளின் பொது இணக்கப்பாட்டுடன் கொள்கையளவிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டுவது இந்த தேசிய சபையின் நோக்கமாக இருக்க வேண்டும் என கட்சித்தலைவர்கள் குறிப்பிட்டனர்.

தேசிய சபை மற்றும் துறைசார் கண்காணிப்பு நிறைவேற்றுக்குழுக்கள் பற்றி அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் அந்தந்த கட்சிகளின் கருத்துக்களை விரைவில் எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்த கருத்துக்களுடன் விரிவுபடுத்தப்பட்ட புதிய நகல் சட்டமூலம் பிரதமர் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் கட்சித்தலைவர்களின் கூட்டத்தின்போது முன்வைக்கப்படும். 17 துறைசார் கண்காணிப்பு நிறைவேற்று குழுக்களையும் தற்போதுள்ள 12 நிலையியல் நிறைவேற்று குழுக்களுடன் மேலும் மூன்று குழுக்களை அமைப்பது தொடர்பிலும் அரசாங்கம் யோசனை முன்வைத்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் கட்சிகள், தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, ஈ.பி.டி.பி, தேசிய காங்கிரஸ் ஆகியகட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். (அ)

# ஆறுகளின் நீர் மட்டம் உயர்வு!

கொழும்பு, செப். 02

நிலவும் மழையுடனான காலநிலையுடன் பல ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

களு, கிங் மற்றும் நில்வலா ஆறுகளின் நீர் மட்டம் தற்போது அதிகரித்து வருவதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

களு கங்கையைச் சுற்றியுள்ள தாழ் நிலங்களிலும் சிறிய வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. இதேவேளை, நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக, 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கொழும்பு, காலி, கண்டி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சிக்கான யாழ்ராணி ரயிலுக்கு புதிய எஞ்ஜின் ஏற்பாடு செய்ய இணக்கம்

கிளிநொச்சி, செப். 02

கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சிக்கான யாழ்ராணி ரயிலுக்கு புதிய எஞ்ஜின் ஒன்றை வழங்குவதற்கு ரயில் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜூலை 11ஆம் திகதி முதல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் சேவையை ஆரம்பித்த கிளிநொச்சிக்கான யாழ்ராணி ரயில், அடிக்கடி எஞ்ஜின் கோளாறு காரணமாக கால தாமதமாகி வருவதாக பயணிகள் அமைச்சர் டக்ளஸின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பும்போது, பளைப் பகுதியில் இயந்திரக் கோளாறு ஏற்பாட்டு கொடிகாமத்துடன் யாழ்ராணியின் சேவை இடைநிறுத்தப்பட்டது.

அதன்பின்னர், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த உத்தரதேவியின் யாழ்ராணியின் பயணிகள் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனால், நாளாந்தம் தொழில் நிமித்தம் யாழ்ராணியில் கிளிநொச்சி சென்றுவரும் அலுவலர்கள் பலரும் பாதிக்கப்பட்டதுடன், குறிப்பாக தூர இடங்களிலிருந்து பயணிக்கும் பெண் அலுவலர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இதனையடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பில், அவரது மேலதிக இணைப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன், ரயில் திணைக்கள் வட்டாரங்களுடன் கலந்துரையாடியதையடுத்து, நேற்று முன் தினம் காலை தற்காலிகமாக புதிய எஞ்ஜின் பொருத்தப்பட்டு வழமைபோன்று கிளிநொச்சிக்கான யாழ்ராணி சேவை சுமுகமாக நடத்தப்பட்டது.

காலை 9.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் யாழ்தேவி ரயிலின் எஞ்ஜினே தற்காலிகமாக யாழ்ராணிக்கு மாற்றப்பட்டு சேவை தடையின்றி முன்னெடுக்கப்பட்டதாக ரயில் திணைக்கள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ரயில் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் செனவிரத்னவுடன் இது விடயம் தொடர்பில் அமைச்சரின் மேலதிக இணைப்பாளர் றுஷாங்கன் தொடர்புகொண்டு பேசியதையடுத்து, கிளிநொச்சிக்கான யாழ்ராணி ரயிலுக்கு நிரந்தரமாக புதிய எஞ்ஜின் ஒன்றை வழங்குவதற்கு ரயில் திணைக்களத்தின் சார்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# மாதா சிலை உடைப்பு

கொழும்பு, செப். 02

லுணுகலை, அடாவத்தை எல்டராடோ பிரிவில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலயத்தின் முன்றலில் அமைக்கப்பட்டிருந்த புனித லூர்து மாதாவின் சிலை சில விஷமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

ஆலயத்தின் நுழைவாயில் கதவை நேற்று முன் தினம் இரவு உடைத்துக்கொண்டு உள்சென்ற நபர்கள் , ஆலயத்தின் முன்றலில் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த மாதா சிலையை அகற்றி அதனை எல்டராடோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அருகா மையில் கொண்டு சென்று நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

குறித்த விடயம் சம்பந்தமாக பிரதேச மக்கள் லுணுகலை பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த பொலிஸார், ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன், பதுளை குற்றவயல் பிரிவின் தடயவியல் பொலிஸாரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கியமாக வாழும் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தவே சில விசமிகள் இந்த செயலில் ஈடுபட்டிருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# பெரமுன ஆட்சியே மீண்டும் அமையும்!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, செப். 02

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க, அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தபோதும், சர்வகட்சி அரசாங்கம் அமைய வாய்ப்பில்லை என பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்மொழிந்த கட்சிகள் கூட இன்று அதற்கு இணங்கவில்லை. இந்த நிலையில் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை இனியும் ஒத்திவைக்க முடியாது.



எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவளித்த 134 பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து ஸ்திரமான அரசாங்கத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைக்கவேண்டும். இதன் மூலம் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தீர்க்கப்படவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவிக்கு நியமித்தத்ற்கு டீலோ அல்லது வழக்குகளில் இருந்து தப்பிக்கவோ காரணம் அல்ல. நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லக்கூடிய ஒரே நபர் அவர்தான். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்த டலஸ் அழகப்பெருமவை விட ரணில் விக்கிரம சிங்கவுக்கு அரசியல் அனுபவம் அதிகம். சர்வ தேச சமூகத்தை கையாள்வதில் அவருக்கு இருந்த முதிர்ச்சி மிகவும் முக்கியமானது-என்றார். (அ)

# மாகாண காணி ஆணையாளர் விடுத்துள்ள சுற்றறிக்கை இரத்துச் செய்யப்படவேண்டும்

## சாள்ஸ் எம்.பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, செப். 02

“மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் விவசாயம் செய்யப்படாதவிடத்து அதற்கான அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும் என்று வடக்கு மாகாண சபையினுடைய மாகாண காணி ஆணையாளர் விடுத்துள்ள சுற்றறிக்கை உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இடைக்கால வரவு-செலவுத் திட்டம் மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

5 ஏக்கருக்குட்பட்ட விவசாய நடவடிக்கைகளுக்குப் பெறப்பட்ட வங்கிக் கடன்கள் தள்ளுபடி செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் இவ்வாறான விவசாயக் கடன் தள்ளுபடி அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டபோதும் அவை மக்களை சரியாக சென்றடையவில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

எனவே, கமநல திணைக்களம் இது தொடர்பில் முறையான திட்டமிடல்களை முன்னெடுத்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

அரச நிறுவனர்களில் இடம்பெறும் ஊழல், மோசடிகளைக் கட்டுப்படுத்த அமெரிக்காவிலுள்ள நடைமுறை இங்கும் கொண்டுவரப்படவுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இது ஒரு போதும் நடக்காது. அரசியலும் அரச நிறுவனர்களில் நடக்கும் ஊழல், மோசடிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது.

தற்போதுகூட அரச நிறுவனங்களுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான தரகுப் பணம் அரசியல்வாதிகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றது. எனவே, இதனை ஆட்சியாளர்களினால் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது.

மண்ணெண்ணெய் இல்லாது பாதிக்கப்பட்டுள்ள பெரும்தொட்டத்தொழிலாளர்கள், மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. முதலில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டபோது அது படகுகளின் உரிமையாளர்களையே சென்றடைந்தது. ஆகவே, வழங்கப்படும் நிவாரணம் மீன்பிடிக்கக் கடலுக்கு செல்கின்ற சகல மீனவர்களுக்கும் கிடைக்க வேண்டும்.

வடக்கு மாகாண சபையினுடைய மாகாண காணி ஆணையாளர் வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் விவசாயம் செய்யப்படாதவிடத்து அதற்கான அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும் என்று அறிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக மக்களுக்குப் போதியளவு உரம் இல்லை. எரிபொருள் இல்லை. மக்கள் தங்கள் காணிகளுக்குச் சென்றுவரக்கூடிய சூழ்நிலை இல்லை. விதைகள், கிருமி நாசினிகள் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் அந்த மக்கள் ஏன் அந்தக் காணிகளில் விவசாயம் செய்ய வில்லை என்று ஜனாதிபதி ஆராயவேண்டுமே தவிர விவசாயம் செய்யாத காணிகளை மீளப் பறிக்க வேண்டும் என்ற கொள்கை முற்றிலும் மக்களுக்கு விரோதமானது.

வடக்கு மாகாண காணி ஆணையாளர், அந்த மக்கள் ஒரு ஏக்கர், இரு ஏக்கர் காணிகளைப் பெற்றுக்கொள்ள எவ்வளவு காலம் அலைந்திருப்பார்கள், கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். வெறுமனே விவசாயம் செய்யாத காணிகளை ஏன் அதில் விவசாயம் செய்யவில்லை என்பதை அறிந்து அவர்கள் விவசாயம் செய்வதற்குரிய வழிவகைகளை அரசு செய்ய வேண்டுமே தவிர அவர்களின் காணிகளைப் பறிக்கக்கூடாது. எனவே, அவர்களின் காணிகளைப் பறிக்கும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றேன்-என்றார். (அ)

# பெரமுனவிலிருந்து விலகியோர் பதவிகளிலிருந்து நீக்கப்படுவர்!

கொழும்பு, செப். 02

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 13 பேரும் கட்சியில் வகித்த பதவிகளில் இருந்து நீக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப் பின்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தவிசாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, டலஸ் ஆதரவு அணியினர் தொடர்பில் கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானமொன்றை எடுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (அ)

# பாடசாலை புத்தகங்களை அச்சிடுவதற்கு தீர்மானம்!

கொழும்பு,செப். 02

அடுத்த வருடத்துக்கு தேவையான பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 16,483 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கும், பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கும், விடை எழுதுவதற்கும் தேவையான காகிதாதிகள் மற்றும் எழுதுகருவிகள் இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் காகித தேவைகளையும் இதனூடாக பூர்த்தி செய்ய கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கல்வி அமைச்சின் கீழ் உள்ள அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் மொத்த பாடப்புத்தகங்களில் 45 வீதத்தை அச்சிடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதவிர, 45 சதவீதம் அச்சு நிறுவனத்துக்கும், மீதமுள்ள 55 சதவீத பாடப்புத்தகங்கள் கொள்முதல் முறையில் தெரிவு செய்யப்பட்ட தனியார் அச்சகங்களுக்கு, அவர்களின் கோரிக்கைக்கு இணங்க, இந்திய கடன் திட்டத்தின் கீழ், வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# 4 முட்டைகளை அதிக விலைக்கு விற்றவருக்கு 5 லட்சம் அபராதம்!

கொழும்பு, செப். 02

பலாங்கொடை நகரிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் முட்டைகளை நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தமைக்காக 5 இலட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறு பலாங்கொடை பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

4 வெள்ளை முட்டைகளை 260 ரூபாவுக்கு விற்பனை செய்தமைக்காகவே இந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக முட்டை ஒன்றுக்கு 65 ரூபா வீதம் என்ற அடிப்படையில் நான்கு முட்டைகளை 260 ரூபாவுக்கு அந்த வர்த்தகர் விற்பனை செய்ததாக நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் குற்றச்சாட்டை முன்வைத்தனர். (அ)

# ஜெனிவா நெருக்கடிகள் தொடர்பில் அரசுக்கு சார்பாகவே செயல்படுவோம்

## சஜித் பிரேமதாஸ உறுதி



கொழும்பு, செப். 02

"ஜெனிவாவில் இலங்கைக்குக் காத்திருக்கும் நெருக்கடிகள் தொடர்பில் நாம் அரசுக்கும் நாட்டுக்கும் சார்பாகவே செயற்படுவோம்" - என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக சர்வதேச சக்தில் பெரிய பிரச்னைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் நாடு தற்போதும் மிகப்பெரும் அபாய நிலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

இந்த மாதம் ஜெனிவாவில் இலங்கைக்குப் பெரிய நெருக்கடி கள் காத்திருக்கின்றன. ஜெனிவா நெருக்கடிகளைப் பொறுத்தவரை யில் நாம் அரசுக்கும் நாட்டுக்கும் சார்பாகவே செயற்படுவோம்.

நாம் மற்றவர்களைப் போன்று பெட்டிகளுடன் ஜெனிவாவுக்குச் செல்ல மாட்டோம். எமது நாட்டைப் பற்றி ஒருபோதும் வெளிநாடுகளுக்குப் புறம் சொல்லவோ முறையிடவோமாட்டோம். நாட்டுக்காகவே செயற்படுவோம்-என்றார். (அ)

# சீரற்ற காலநிலையால் 55 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, செப். 02

நாட்டில் பல பகுதிகளிலும் பெய்துவரும் கடும் மழையினால் 55 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக 3 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இன்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 32 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 222 ஆக உள்ளது. (அ)

# துப்பாக்கி சூட்டில் இளம் பெண் பலி!

## கேகாலையில் பயங்கரம்

கொழும்பு, செப். 02

கேகாலை, களுகல மாவத்தை பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

களுகல்ல மாவத்தையிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் பணியாற்றிய கேகாலை, ஹம்புதுகல பகுதியைச் சேர்ந்த 36 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன. துப்பாக்கிதாரி தப்பியோடியுள்ளார். (அ)

# வவுனியாவில் இவ்வாண்டு நான்கு யானைகள் மரணம்!

வவுனியா, செப். 02

வவுனியா மாவட்டத்தில் கடந்த 8 மாதங்களில் மாத்திரம் நான்கு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வன ஜீவ ராசிகள் திணைக்கள தகவல்கள் தெரிவிகின்றன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் காடு அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையால், காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைவதோடு, மக்களின் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்படுகின்றன.

இந்நிலையில், குறித்த பகுதியிலுள்ள மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வருடம் 8 மாதங்களில் 4 யானைகள் மாத்திரம் உயிரிழந்துள்ளன. அதேவேளை, கடந்த வருடத்தில் 10 யானைகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புலிகள் பயன்படுத்திய எரிபொருள் கொள்கலன் அகழ்ந்தெடுக்கப்பட்டது!



முல்லைத்தீவு, செப். 02

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 10ஆம் வட்டார பகுதியிலுள்ள தனியார் காணியில் விடுதலைப் புலிகளின் பயன்பாட்டிலிருந்த நிலக்கீழ் எரிபொருள் கொள்கலன் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

இந்த காணிக்குள் எரிபொருள் கொள்கலன் புதைத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று, நேற்று முன் தினம் அகழ்ந்து எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, பொலிஸார், இராணுவத்தினர், கிராமசேவையாளர் முன்னிலையில் நேற்று முன் தினம் காலை அகழ்வுப்பணி நடந்தது. கனரக வாகனங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில், 16.3 அடி நீளமும், 7.9 அடி விட்டமும் உடைய இரும்பு கொள்கலன் அகழ்ந்து எடுக்கப்பட்டது.

கொள்கலனுக்குள் எரிபொருள் இருக்கவில்லை. அது இரண்டு இடங்களில் வெட்டப்பட்டிருந்தது. அதனுள் மண்ணெண்ணெய் சேமித்து வைக்கப்பட்டிருக்கலாமென, வாசனையின் மூலம் ஊகிக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவிற்கடைய கொள்கலன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி 14,988 முறைப்பாடுகள் கிடைத்ததாம்!

கொழும்பு, செப். 02

மோதல்கள் காரணமாக காணாமல் போனவர்கள் தொடர்பான 14,988 முறைப்பாடுகள் காணாமல் போனோர் அலுவலகத்திற்கு கிடைத்துள்ளதாக நீதித்துறை, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நினைவு தினத்தை முன்னிட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காகவும், அவர்களுக்கு நீதி வழங்குவதற்காகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதி வழங்குவதற்காகவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும் இந்த அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் 2016 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க காணாமல் போனோர் அலுவலக சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் விசாரணைகள் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன.

அலுவலகத்திற்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நான்கு மாதங்களில் விசாரணை நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

காணாமல் போனோர் தொடர்பான அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை எதிர்வரும் இரண்டு வருடங்களில் நிறைவு செய்வதே தமது நோக்கமாகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கான நேர்மையான முயற்சிகளை வெற்றியடையச் செய்து இனம், மதம் மற்றும் மொழி ரீதியிலான முரண்பாடுகளைத் தடுத்து கிராமிய அமைதியைப் பாதுகாக்க அரசியலமைப்பு சட்டக் கட்டமைப்பு தயாரிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

காணாமற்போனோர் அலுவலகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் நட்டஈட்டைப் பெறுவதற்கு அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்த காலத்தில் மோதல்கள் என்ற போர்வையில் தனிப்பட்ட பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. காணாமல் போனதாகக் கூறி சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றனர். இவை அனைத்திற்கும் தீர்வாக அரசியலமைப்பு விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே காணாமல் போனோர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சட்டவிரோதமாக உலோக பொருட்கள் ஏற்றுமதி செய்ய முயன்ற மூவர் கைது

கொழும்பு, செப். 02

இந்திய வர்த்தகர் ஒருவர் இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் ஏற்றுமதி செய்ய முயன்ற 6 கோடி ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான பழைய உலோகப் பொருட்கள் அடங்கிய 10, கொள்கலன்கள் இலங்கை சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும், சுங்கப் பணிப்பாளருமான சுதத்த சில்வா தெரிவித்தார்.

அந்த பத்து கொள்கலன்களில் இருந்து 140 மெற்றிக் தொன் பித்தளைப் பொருட்கள், அலுமினியம் மற்றும் இரும்புப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், அவற்றில் 140 மெற்றிக் தொன் இயற்கை இறப்பர் உள்ளதாக இலங்கை சுங்கத்துக்கு சமர்ப்பித்த சுங்கப் பிரகடனத்தில் ஏற்றுமதியாளர் தெரிவித்துள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த சட்டவிரோத ஏற்றுமதி தொடர் பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# டலஸ் அணிக்கு வலை விரிக்கும் சஜித், விமல் வீரவன்ஸ தரப்புகள்

கொழும்பு, செப். 02

புதிய அரசியல் கூட்டணி தொடர்பில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து வெளியேறிய அணியுடன் பேச்சு நடத்தப்படும் - என்று சுயாதீன கட்சிகளின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே, மேற்படி சுயாதீன கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில இந்த அறிவிப்பை விடுத்தார்.

"டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட 13 பேர் சுயாதீனமாக இயங்கவுள்ளதாக பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளனர். இவ்வாறு அவர்கள் மொட்டு கட்சியில் இருந்து வெளியேறிவிட்டால் அவர்களுடன் பேச்சு நடத்தப்படும்." எனவும் கம்மன்பில குறிப்பிட்டார்.

சுயாதீன அணிகள் இணைந்து விமல் வீரவன்ஸ தலைமையில் எதிர்வரும் 04 ஆம் திகதி புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கவுள்ளன. அந்த கூட்டணியில் டலஸ் அணியை இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

அதேவேளை, டலஸ் அணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# தொடரும் உள்நாட்டுப் போரில் சிதையும் லிபியாவும் கேணல் கடாபியின் ஆட்சி கவிழ்ப்பின் விளைவும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா



அரபு நாடுகளில் செல்வந்த நாடாக ஓர் காலத்தில் திகழ்ந்த லிபியாவின் தலைநகர் திரிப்போலியில் கடந்த சில நாட்களாக இரு ஆயுத தரப்பினருக்கு இடையே நடந்த மோதலில், 75க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும் 140-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என தகவல்கள் தெரிவித்தன.

எண்ணெய் வளம் மிக்க நாடான லிபியாவில் நடந்துவரும் போட்டி அரசுகளுக்கு இடையிலான மோதல் தற்போது உச்சகட்டத்தை அடைந்திருப்பதால், மக்கள் பெரும் கையறு நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

**லிபியாவில் போட்டி அரசுகள் மோதல்:**

தலைநகர் திரிப்போலியை மையமாகக் கொண்டு பிரதமர் அப்துல் ஹமீத் பெய்பா தலைமையில் ஓர் அரசு இயங்கிவருகிறது.

சிர்ட் எனும் கடற்கரை நகரை மையமாகக் கொண்டு ஃபாதி பகாஷா தலைமையில் போட்டி அரசு ஒன்றும் நடத்தப்படுகிறது. ஃபாதி பகாஷா தன்னை பிரதமராக அறிவித்துச் செயல்பட்டுவருகிறார்.

இருவருமே தனித்தனியே போராளிக் குழுக்களை வைத்திருக்கின்றனர். ஃபாதி பகாஷா தலைமையிலான குழுக்கள் கடந்த சில வாரங்களாகத் திரிப்போலியைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கியிருக்கின்றன. இந்தச் சூழலில்தான் இப்படியான வன்முறைச் சம்பவங்கள் வெடித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**கடாபியின் ஆட்சி கவிழ்ப்பு:**

லிபியாவின் அதிபராக இருந்த முஅம்மர் அல்-கடாஃபியின் ஆட்சிக்கு எதிராக, 2011-ல் நேட்டோ அமைப்பின் ஆதரவுடன் பெரும் போர் நடந்தது. அதில் அவர் இறுதியாக கொல்லப்பட்டார்.




எனினும், அதன் பின்னர் உள்நாட்டுப் போர், கலவரம், வன்முறைச் சம்பவங்கள் காரணமாக லிபியா அமைதி இழந்து தவித்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் ஓரளவு அமைதி நிலவியது போல புலப்பட்டது.

இந்நிலையில், முன்னாள் ராணுவத் தளபதி ஹைதாம் தஜோரி தலைமையிலான திரிப்போலி புரட்சியாளர்களின் படையணி எனும் போராளிக் குழுவுக்கும், அப்தெல்-கனி அல்-கிக்லி தலைமையிலான குழுவுக்கும் இடையில் தலைநகர் திரிப்போலியில் தொடர்ந்து கடும் மோதல்கள் நடந்தன.

பிற பகுதிகளிலும் இக் கலவரம் பரவியது. இதில் 75 பேர் கொல்லப்பட்டனர். 140-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மோதல் நடந்த பகுதியில் வசித்துவந்த பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். அத்துடன் திரிப்போலியில் உள்ள மருத்துவமனைகள் மீதும் குண்டு வீசப்படுவதாகவும், காயமடைந்தவர்களை மீட்கச் செல்லும் ஆம்புலன்ஸ்கள் தடுக்கப்படுவதாகவும் லிபியா சுகாதாரத் துறை தெரிவித்திருக்கிறது. இது போர்க்குற்றம் என்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**கடாபியின் ஆட்சி பொற்காலமா?**

தற்போது லிபியாவில் உள்நாட்டு போர் தீவிரமாக நடந்து வருகிறது. முன்பு அரபு நாடுகளின் நட்சத்திரமாக ஒரு காலத்தில் புகழப்பட்ட லிபிய தலைவர் கடாபியின் 42 வருட கால ஆட்சி 2011இல் முடிவினை எட்டியது.

அன்றைய கடாபி ஆட்சியின் எதிர்ப்பாளர்கள் லிபியாவை அமெரிக்க ஆதரவுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம் கடாபியின் அதிகாரம் லிபியாவில் முற்றுப் பெற்றது.

**27 வயதில் கேணல் கடாபி ஆட்சியேற்பு**

அரபு முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட லிபியா வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் ரோமப் பேரரசு, ஒட்டமான் பேரரசு, இத்தாலி ஆகியவற்றின் ஆட்சிக்குக் கீழ் வந்த லிபியா, இரண்டாம் உலக யுத்த முடிவில் பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை இணைந்து நடத்திய இராணுவ ஆட்சியின் கீழ்வந்தது.

1951இல் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய லிபியாவில் மன்னராட்சி ஏற்படுத்தப்பட்டது. இரத்தம் சிந்தாத இராணுவ புரட்சி மூலம் மன்னர் இட்ரிஸை 1969 இல் பதவியிலிருந்து அகற்றிய இராணுவ கப்டனான முவமர் கடாபி நாட்டின் அதிபரானார். அப்போது அவருக்கு 27 வயது.

கடாபி பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே லிபியாவிலிருந்து பிரிட்டிஷ், அமெரிக்க இராணுவ தளங்களை அகற்றினார். எண்ணெய் நிறுவனங்களுடன் புதிய ஒப்பந்தங்களை செய்ததன் மூலம் லிபியாவின் எண்ணெய் வருமானத்தை அதிகரித்துக் கொண்டார்.

எண்ணெய் கம்பனிகளை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததனாலும் உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்ததனாலும் லிபிய மக்களின் தலாவீத வருமானம் பெருமளவு அதிகரிப்பை கண்டது.

பீடோயின் பழங்குடியின பெற்றோருக்கு, பிறந்த கடாபி, தனது பழங்குடியின பின்னணியை விளம்பரப்படுத்துவதில் எப்போதும் பெருமைப்பட்டார். தனது விருந்தாளிகளை, நாடோடி கொட்டகையிலேயே வரவேற்பார். அதேபோல, வெளிநாட்டுப் பயணங்களில், அந்த கொட்டகையை கொண்டு சென்று, அதை காட்சிப்பொருளாக வைத்துவிடுவார்.

**அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு :**

அமெரிக்காவால் சர்வாதிகாரி என்று பிரகடனப்படுத்தப்பட்டு 2011 அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி படுகொலை செய்யப்பட்ட கடாபியின் மறுபக்கத்தையும் நாம் அறிய வேண்டும்.

பிரஞ்சு, இத்தாலி என்று மாறி மாறி அன்னியர்கள் ஆண்ட நாடு லிபியா. முடிவாக மன்னராட்சி ஏற்பட்டது. மன்னரும் இத்தாலியர்களுக்கு எடுபிடியாகவே இருந்தார். ராணுவப் புரட்சி வெடித்தது. புரட்சிக்குத் தலைமை வகித்தவர் கடாபி. 1969 முதல் 2011 வரை அசைக்கமுடியாத தலைவராக விளங்கினார்.

பிடல் காஸ்ட்ரோ, யாசர் அராபத் வரிசையில் அமெரிக்காவின் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் கடாபி. கடாபியின் ஆட்சியை லிபியாவின் பொற்கால ஆட்சி என்று மக்கள் கூறுவர்.

கேணல் கடாபியின் ஆட்சியில் அன்று, லிபியாவில் வழங்கப்படும் மின்சாரத்துக்கு கட்டணம் ஏதும் கிடையாது, மின்சாரம் இலவசம். வங்கிகளில் வழங்கப்படும் கடன்களுக்கு வட்டி கிடையாது. வீடு மனை என்பது லிபியாவில் மனித உரிமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. லிபிய நாட்டில் திருமணம் முடிக்கும் ஒவ்வொரு புதுமணத் தம்பதியினர்களுக்கும் அந்நாட்டின் அரசு 60,000 தினார், அதாவது அமெரிக்க பணம் 50,000 டாலர் பணத்தை இலவசமாக வழங்கியது. இதனாலேயே கடாபியின் ஆட்சியை லிபியாவின் பொற்கால ஆட்சி என்று மக்கள் கூறுவர்.

**உயர் கல்வி, மருத்துவம் இலவசம்:**

அக்காலத்தில் லிபியாவில் கல்வி இலவசம். ஆரம்பக் கல்வி மட்டுமல்ல, உயர் கல்வியும் இலவசம். வெளி நாட்டுக்குச் சென்று படிக்க விரும்பினாலும், அத்தனை செலவுகளையும் அரசே ஏற்கும். மருத்துவம் முற்றிலும் இலவசம் கூட. அத்துடன் கடாபி அதிகாரத்தை கைப்பற்றும் பொழுது லிபிய மக்களில் எழுத படிக்கத் தெரிந்தோர் வெறும் 25 வீதம் மட்டுமே, ஆனால் அவர் ஆட்சிக்கு வந்ததன் பின் அது 83 வீதமாக உயர்ந்தது.

அது மாத்திரமன்றி ஒரு குடிமகன் விவசாயம் செய்ய விரும்பினால் அவருக்கு வாழ ஒரு வீடும், விவசாயம் செய்வதற்கு தேவையான நிலமும் விவசாய உபகரணங்களும், விதைகளும் பசளைகளும் இன்னும் இதற்கு அவசியமான அனைத்தும் முற்றிலும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டது.

**அரேபிய ஒன்றியம் உருவாக்கம் :**

அக்காலத்தில் ஐரோப்பிய யூனியனை ஒத்த அரேபிய ஒன்றியத்தை அமைப்பது இவரது இலட்சியமாக இருந்தபோதும் அதற்கு ஆதரவு கிட்டவில்லை. ஆயினும் பாரஸீக நாடான ஈரானுக்கு எதிராக அரபு நாடுகள் பலவும் கூட்டு சேர்ந்தபோது கொள்கையின் அடிப்படையில் ஈரானுக்கு ஆரவாக செயற்பட்டவர் கடாபி. அதேவேளை புனித மக்காவை உலக முஸ்லிம்களின் பொதுச் சொத்தாக்க வேண்டுமென்று கூறியதன் மூலம் சவுதி அரேபியாவின் பகையை சம்பாதித்துக் கொண்டார்.

**சுதந்திர போராட்டங்களுக்கு ஆதரவு:**

சர்வதேச ரீதியில் கிளர்ச்சிகளுக்கும் சுதந்திர போராட்டங்களுக்கும் ஆதரவு அளித்ததன் மூலம் கடாபி அமெரிக்காவுடன் பகைமையை தேடிக் கொண்டார். 1970 இன் பிற்பகுதிகளில் பிற நாட்டு கிளிர்ச்சியாளர்களுக்கு லிபியாவில் பயற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். ஐரிஸ் குடியரசு இராணுவம், வெனிசூலா கிளர்ச்சிக்காரர் ஆகியோருக்கு கடாபி ஆதரவு வழங்கினார். கடாபியின் ஆட்சியிலேயே லிபியர்களுக்கு மருத்துவ வசதி பெறுவதற்கு வெளிநாட்டுக்கு செல்ல வேண்டுமெனில் அரசு இலவசமாக அவர்களுக்கு உதவிகள் வழங்கும். அது மாத்திரமின்றி ஒரு வாகனம் வாங்கும் போதும் அதன் மதிப்பில் பாதித் தொகையை அரசு இலவசமாகவும் வழங்கியது. வியக்கத்தக்க வகயில் லிபியா உலக வங்கிகளிடம் இருந்து கடாமியின் ஆட்சியில் கடன் வாங்கியது கிடையாது.

**செயற்கை ஆற்றை உருவாக்கிய கடாபி :**

உலகிலேயே மிகப்பெரிய செயற்கை ஆற்றை உருவாக்கி லிபியாவின் பாலை நிலத்தை பசுமையாக்கியவர் என்ற பெருமையும் கடாபிக்கு உண்டு. உயர் கல்வி கற்று பட்டதாரியாகும் மாணவர்கள் தமக்குரிய வேலை வாய்ப்பு கிடைக்காது போகும் பட்சத்தில், அவர்களுக்குரிய தகுந்த தொழில் கிடைக்கும் வரை அந்தத் தொழிலுக்குரிய சம்பளத்தை அன்றைய காலத்தில் லிபிய அரசு மாதா மாதம் வழங்கி வந்தது. லிபிய நாட்டிற்கு கிடைக்கும் எண்ணெய் வருமானத்தில் ஒரு தொகையை அந்த நாட்டு மக்க ளின் வங்கிக் கணக்கில் சேமிப்பில் இட்டு வந்தது அந்த அரசு. பிரசவத்தின் போது தாய்க்கு 5500 அமெரிக்க டாலர் நாணயத்துக்கு இணையான லிபிய தினாரை வழங்கியது கடாபியின் அரசு. 1980 களில் 25 வீத லிபியர்கள் பல்கலைக் கழகப் பட்டதாரிகளாக விளங்கினர்.

லிபியாவை கடந்த பல தசாப்தங்களாக ஆட்சி செய்த கர்னல் கடாபி மேற்குலகுக்கு அடிபணியாமல் எப்போதும் சிம்ம சொப்பனமாகவே விளங்கினார். இன்றைய லிபியாவுல் நடந்துவரும் போட்டி அரசுகளுக்கு இடையிலான மோதல் தற்போது உச்சகட்டத்தை அடைந்திருப்பதற்கு முக்கிய காரணம் கடாபியின் ஆட்சி கவிழ்ப்பேயாகும்.

ஆட்சி கவிழ்ப்பின் விளைவு

2011 அக்டோபர 20இல் கடாபியின் பிறந்த ஊரான சிரடே நகரை கைப்பற்றிய அமெரிக்க ஆதரவு படைகள் அவரை கொன்றுவிட்டதாக அறிவித்தனர். இதன் விளைவின் அறுவடையாக வட ஆப்பிரிக்க பிராந்தியத்திலும், அரபுலக நாடுகளிலும், லிபியாவில் உள்நாட்டுப் போரின் தாக்கம் மிக வலுவடைந்து உள்ளது.






# தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஆற்றல்: உண்மைதானா?

**- யதீந்திரா**

ரணில் விக்கிரமசிங்க நிர்வாகம் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சில தனிநபர்கள் மீதான தடையை நீக்கியிருக்கின்றது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். இது தொடர்பில் நான் முன்னரே குறிப்பிட்டிருக்கின்றேன். இதனை வெறுமனே பொருளாதார நெருக்கடியின் விளைவாக மட்டும் நோக்கினால், அது முழுமையான பார்வையாக இருக்காது. ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் சிலர் மீதான தடைநீக்கப்பட்டது.

கோட்டபாய ராஜபக்ச அதிகாரத்திற்கு வந்ததை தொடர்ந்து மீளவும் தடைவிதிக்கப்பட்டது. இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதை தொடர்ந்து மீளவும் தடைநீக்கப்பட்டிருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க நிர்வாகம் புலம்பெயர் சமூகத்தினுடான ஊடாட்டங்களை அதிகரிக்க விரும்புகின்றது. அதற்கான கதவுகளை திறந்து வைக்க விரும்புகின்றது. ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் இதற்கான பகுதியளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் சில வெற்றிகளையும் அரசாங்கம் எட்டியிருந்தது. தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஒரு பகுதியினர் கொழும்புடன் உரையாடுவதற்கு இணங்கியிருந்தனர்.

இதன் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகவுள்ளது. இம்முறை ஒரு புதிய விடயமும் இடம்பெறவுள்ளது. அதாவது புலம்பெயர் அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதனையும் வெறுமனே பொருளாதார நெருக்கடியை கையாளுவதற்கான ஒரு தந்திரோபாயமாக மட்டுமே நோக்குதல் சரியல்ல. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் புலம்பெயர் சமூகத்தை ஒரு தரப்பாக அணுக விளைகின்றது. இதில் சாதகமும் உண்டு பாதகமும் உண்டு. தமிழ் புலம்பெயர் சமூகம் தாயகத்தின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் உத்தியோகபூர்வமாக தலையீடு செய்வதற்கான கதவுகள் திறக்கப்படுகின்றன. ஆனால் மறுபுறம் புலம்பெயர் சமூகத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு பிரத்தியேக இடத்தை வழங்குகின்ற போது, தாயகத்திலுள்ள அரசியல் தரப்புக்களும் புலம்பெயர் அமைப்புக்களும் ஒரு புள்ளியில் சந்திக்காதுவிட்டால், அது இறுதியில் தாயக அரசியலை பலவீனப்படுத்தவே பயன்படும். இந்த விடயத்தில் புலம்பெயர் அமைப்புக்கள் மிகுந்த நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். ஏனெனில் அரசாங்கம் ஒரு தந்திரோபாய நகர்வை மேற்கொள்ளுகின்றது. அதனை எதிர்கொள்ள வேண்டுமாயின் எதிர்-தந்திரோபாயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

முதலாவது தற்போது அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கையானது முற்றிலும் தமிழ் புலம்பெயர் சமூகத்தை மட்டும் இலக்காகக் கொண்டதல்ல. புலம்பெயர் அலுவலகம் என்பது, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை அணுகுதல் என்னும் இலக்கையே கொண்டிருக்கின்றது. சிறி நரேந்திரமோடி பிரதமரானதைத் தொடர்ந்து, இந்திய புலம்பெயர் சமூகத்துடன் ஊடாடும் நிகழ்ச்சித் திட்டமொன்றை அவர் முன்னெடுத்திருந்தார்.


கிட்டத்தட்ட இதுவும் அவ்வாறான ஒன்றுதான். ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்துவரும் இலங்கையர்களை, தங்களது சொந்த நாட்டின் வளர்ச்சியின் மீது ஈடுபாடுள்ளவர்களாக மாற்றுவதும், அவர்கள் இலங்கையின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் ஊடாடுவதற்கான சந்தர்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதுமே புலம்பெயர் அலுவலகத்தின் பிரதான இலக்காக இருக்கப் போகின்றது. இதில் தமிழர்கள் பிரதானமாக நோக்கப்படுவர் ஏனெனில் ஒப்பீட்டடிப்படையில் தமிழ் புலம்பெயர் சமூகமளவிற்கு சிங்கள சமூகம் வளர்சியடைந்திருக்கவில்லை.

இதனை நமது புலம்பெயர் சமூக அமைப்புக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? வழமைபோல் சாதாரணமாக எதிர்த்துவிட்டு, கடந்து போகும் அணுகுமுறையை கைக் கொள்ளப் போகின்றோமா அல்லது, ஒரு எதிர்-தந்திரோபாய அடிப்படையில் கையாளப் போகின்றோமா? ஒரு விடயத்தை தெளிவாக குறித்துக் கொள்ள வேண்டும். அதாவது, நமது புலம்பெயர் அமைப்புக்கள் இதனை நிராகரிக்கலாம் ஆனால், உடன்பட்டுச் செல்பவர்களுடன் ஊடாடுவதன் மூலம், புலம்பெயர் அலுவலகத்தை இயக்க முடியும். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்துவரும் சிங்களவர்கள் இதற்கு பெருமளவில் ஆதரவை வழங்குவர். ஆனால் பொதுவாக புலம்பெயர் சமூகத்துடனான ஊடாட்டமாகவே இது காட்சிப் படுத்தப்படும்.

யூத டயஸ்போறா போன்ற நிலையில் ஈழத் தமிழர்கள் இல்லாவிட்டாலும் கூட, கருத்தில்கொள்ளத்தக்க ஒரு டயஸ்போறாவாக, புலம்பெயர் ஈழத் தமிழர்கள் திரட்சிபெற்றிருக்கின்றனர். காலப் போக்கில் இந்த நிலையில் மேலும் வளர்சியேற்படலாம். ஆனால் அந்த வளர்ச்சியென்பது தாயகத்தில் வாழும் மக்களுக்கு பயன்படவில்லையாயின், புலம்பெயர் சமூகமென்பது பயனற்ற ஒன்றாகிவிடும் ஆபத்துண்டு. விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில், ஈழத் தமிழர் புலம்பெயர் சமூகம் பெருமளவு திரட்சிபெற்ற சமூகமாக இருந்தது. தாயகம் தொடர்பான ஈடுபாடும் அர்ப்பணிப்பும் மேலோங்கியிருந்தது. 2009இற்கு பின்னர் இந்த நிலைமை பெருமளவு வீழ்சியடைந்துவிட்டது.

பொதுவாக தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் என்று கூறிக்கொண்டாலும் கூட, இதில் பல பிரிவுகளும் பார்வைகளும் உண்டு. இந்த நிலையில்தான், கொழும்பு, புலம்பெயர் சமூகத்தை ஒரு தரப்பாக அணுகும் தந்திரோபாயமொன்றை முன்னெடுக்க முயல்கின்றது.

மற்றவர்கள் எங்களை நோக்கி வருகின்ற போது, அதனை எதிர்கொள்ளாமல் விலகிக் கொள்வது ஒன்று. இரண்டு அதனை எதிர்கொண்டு, அவர்கள் திறக்கும் கதவுகளால் சென்று, அதனை கையாள முற்படுவது என்பது இன்னொன்று. ஆனால் இந்த விடயத்தில் விலகிக் கொள்வது புத்திசாதுர்யமான அணுகுமுறையாக இருக்க முடியுமா?



தமிழ் புலம்பெயர் சமூக அமைப்புக்கள் தங்களை ஒரு பலமாக முன்னிறுத்துவதற்கான ஒரு வாய்ப்பு நமது கதவை தட்டுகின்றது. இதனை எவ்வாறு கையாளலாம்? இதனை கையாளுவதற்கு தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் ஒரு வேலைத்திட்டத்திற்குள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். குறுகிய கால நிபந்தனைகளின் அடிப்படையில் விடயங்களை கையாள முற்படலாம். தாயகத் திலுள்ளவர்களும், புலம்பெயர் அமைப்புக்களும் இணைந்து குறித்த குறுகியகால நிபந்தனைகளை திட்டமிடலாம். புலம்பெயர் அலுவலகம் என்பது அடிப்படையில் மத்திய அரசின் கீழுள்ள கட்டமைப்பாகவே இருக்கும். தமிழ் புலம்பெயர் அமைப் புக்கள் தமிழர் தாயகத்துடன் நேரடியாக ஊடாடுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. மாகாண சபைகள் இயங்குமாக இருந்தால் அதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கும்.

இவ்வாறானதொரு பின்னணியில் புலம்பெயர் அலுவலகத்துடன் தமிழ் புலம்பெயர் சமூகம் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும்? இந்த இடத்தில் தமிழ் புலம்பெயர் சமூகம் ஒரு நிபந்தனையை முன்வைக்க முடியும். அதாவது, வடக்கு கிழக்கிலுள்ள சுயாதீன அமைப்புக்களுடன் இணைந்து தடையற்ற வகையில் செயற்படுவதற்கான சந்தர்பங்களை புலம்பெயர் அலுவலகம் ஏற்டுபடுத்த வேண்டும். தேசிய பாதுகாப்பு கருதி சில கண்காணிப்புக்கள் (மறைமுகமாக) இருந்தாலும் கூட, தமிழ் புலம்பெயர் சமூகத்தின் தாயக செயற்பாடுகளில் எவ்வித இடையூறுகளும் இருக்கக் கூடாது. இதற்கான உத்தரவாதங்களை புலம்பெயர் அலுவலகம் உறுதிப்படுத்த வேண்டும். இப்படியான கோரிக்கைகளை முன் வைக்கலாம்.

தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று சாத்தியப்படும் வரையில், தமிழ் புலம்பெயர் சமூகம் மத்திய அரசின் அங்கங்களோடு இணைந்து செயற்பட முடியாதென்னும் நிபந்தனையை முன்வைக்கலாம். இதனை நிராகரிப்பதற்கான வாய்ப்புக்கள் தற்போதைய சூழலில் இல்லை. ஒரேயடியாக நிராகரித்துவிட்டுச் செல்வதற்கு பதிலாக, இவ்வாறான அணுகுமுறையின் மூலம் ஊடா டுவது, ஒரு தந்திரோபாய அணுகு முறையாக இருக்கின்ற அதேவேளை, புலம்பெயர் சமூகம், தாயகத்திலுள்ள அமைப்புக்களுடன் இணைந்து, இயங்குவதற்கான வாய்ப்பும் உருவாகும்.

ஒரு வேளை ஒரு கட்டத்தில் இது தோல்வியுற்றாலும் கூட, தமிழ் புலம்பெயர் சமூகத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை. ஏனெனில் ஏற்கனவே செய்யப்பட்ட பணிகளால் தாயக மக்கள் நன்மடைந்திருப்பர்.

குறுகிய கால நிபந்தனைகளை அரசாங்கம் எவ்வாறு நிறைவேற்றுகின்றது என்பதற்கு அமைவாக, தமிழ் புலம்பெயர் சமூகம் அதன் ஊடாட்டத்தை அதிகரிக்கலாம். தமிழ் புலம்பெயர் சமூகம் ஒரு பலமாக திரட்சிபெற்றிருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்கான தருணமிது. ஆனால் இதனை போதிய தயாரிப்புடனும் தந்திரோபாயத்துடனும் அணுக வேண்டும்.



உணர்சிவசப்பட்டும் அணுகக் கூடாது அதே வேளை, வழமையான எதிர்ப்பரசியல் அணுகுமுறையின் ஊடாகவும் அணுகக் கூடாது. அத்துடன் போதிய வெளிப்படைத் தன்மையில்லாமல், ஒவ்வொருவரும் தங்களுக்கிருக்கும் தொடர்புகளின் வழியாகவும் அணுகக் கூடாது. இது தொடர்பில் விரிவான கலந்தாலோசனைகள் அவசியம்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

## மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

**02.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**02.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கல்முனை வடக்கு விடயத்தில் தமிழ்த் தலைமைகள் உறக்கம்

## சந்திரநேரு சந்திரகாந்தன் காட்டம்

அம்பாறை, செப். 02

**கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு) பிரதேச செயலகம் 33 வருடங்களாக தனியான பிரதேச செயலகமாக தொழிற்பட்டு வரும் நிலையில், அதனை இல்லா தொழிப்பதற்கான முஸ்தீபுகள், முஸ்லிம் அடிப்படைவாதிகளாலும், அரசியல் வாதிகளாலும் முன்னெடுக்கப்படுவது வெளிப்படையான விடயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்தார்.**

தமிழ்த் தலைமைகள், இவ்விடயத்தில் உறங்கு நிலையில் உள்ளார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களது வங்குரோத்து அரசியலை தமது சமூகத்துக்குள் தக்கவைத்துக்கொள்வதற்காக கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை அடிக்கடி கையிலெடுத்துக்கொண்டு, இரு இனங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

இணைந்த வடக்கு-கிழக்கு, அதில் தமிழ் பேசும் மக்களுக்கான மாகாண அலகு, சிங்கள பேரினவாதத்துடன் இணையாது மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய மாகாண சுயாட்சி என பகல் கனவு காணும் தமிழ்த் தலைமைகள், இவ்விடயத்தில் உறங்கு நிலையில் உள்ளார்கள்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் யார்? முஸ்லிம் தீவிரவாதப் போக்குடைய அடிப்படைவாதிகள்தான். அப்பாவி முஸ்லிம்கள் அல்லர்.

கல்முனை வாழ் பூர்வீக தழிழர்கள் இன்று தமது வாழ்விடங்களை நாளுக்கு நாள் இழந்து வருகின்றனர். கடந்த நல்லாட்சி காலத்தில் கிடைத்த வாய்ப்புக்களை எல்லாம் நழுவவிட்ட தமிழ்த் தலைமைகள் இனி ஒன்றையும் சாதிக்கப் போவதில்லை.

இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்றால், முஸ்லிம்கள் மத்தியில் உள்ள மதவாத அடிப்படைவாத போக்கற்ற சிவில் சமூகங்கள் முன்வர வேண்டும். தமிழ், முஸ்லிம் சிவில் சமூகங்கள், அரசியல்வாதிகளை புறந்தள்ளிவிட்டு, ஒரே மேடையில் பேச முன்வரவேண்டும்-என்றுள்ளது. (அ)

# உயர்தர மாணவர்களுக்கு மின்குமிழ்கள் வழங்கல்



அம்பாறை, செப். 02

தற்போது நாட்டில் நிலவி வரும் மின்துண்டிப்பு காரணமாக, இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படக்கூடாதென்று குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.முபாறக் 4 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மின்குமிழ்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

குச்சவெளி பிரதேச சபைகுட்பட்ட பகுதியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுவரும் மாணவர்கள், மின்துண்டிப்பு நேரங்களில் தங்களின் கல்வி கற்றல் செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் முதற்கட்ட நடவடிக்கையாக புல்மோட்டை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்களுக்கும், புல்மோட்டை அறபாத் முஸ்லிம் வித்தியாலய மாணவர்களுக்கும் இந்த மின்குமிழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், மத்திய கல்லூரியின் முதல்வர் ஜெ.எம்.இக்பால், அறபாத் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஏ.அப்துல் காதர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஏ.நப்ஸார் உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# கல்முனையில் யானை தொல்லை; கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை



அம்பாறை, செப். 02

கல்முனை மற்றும் நற்பிட்டிமுனைப் பிரதேசங்களில் இரவு நேரங்களில் அதிகரித்துள்ள யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மின்னொளி வசதிகளை அதிகரிப்பதற்கு கல்முனை மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபையின் 53ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாநகர சபை உறுப்பினர் சீ.எம்..முபீத் விடுத்த கோரிக்கையையடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநகர முதல்வர் உரையாற்றுகையில்-

இரவு நேரங்களில் நற்பிட்டிமுனை பிரதேசத்தினுள் காட்டு யானைகள் பட்டி பட்டியாக திரண்டு வந்து, விவசாய நிலங்களையும் பொது மக்களின் உடைமைகளையும் சேதப்படுத்தி வருகின்றன. ஊருக்குள் அத்துமீறி நுழையும் யானைகளினால் மக்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது.

ஆகையால், யானைகளின் தொல்லைகளை கட்டுப்படுத்துவதற்காக இப்பிரதேசத்தில் விசேடமாக மின்னொளி வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும். இதற்காக வெளிச்சம் கூடிய மின்குமிழ்கள் அவசரமாக பொருத்தப்பட வேண்டும். அத்துடன் யானைகளை துரத்துவதற்காக பட்டாசுகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து முதல்வரின் ஆலோசனைக்கமைவாக குறித்த பிரதேசத்தில் மேலதிக மின்குமிழ்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, கல்முனை அஹமட் பஸாருக்கு பின்னாலுள்ள பகுதியிலும் யானைகள் ஊடுருவுவதாக சுட்டிக்காட்டிய மாநகர சபை உறுப்பினர் எம்.சிவலிங்கம், இப்பகுதியையும் வெளிச்சமூட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்து குறித்த நடவடிக்கையின்போது இப்பகுதியையும் உள்வாங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

# மிளகாயில் வாடல் நோய் செய்கையாளர்கள் பாதிப்பு



மட்டக்களப்பு, செப். 02

மிளகாய் செய்கையில் ஒருவித வாடல் நோய் பரவுவதனால் செய்கையாளர்கள் மிகவும் நட்டத்தை எதிர்கொண்டு வருவதாக மட்டக்களப்பு - களுதாவளைப் பிரதேசத்தில் மிளகாய் செய்கையில் ஈடுபட்டுவரும் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் பரம்பரை பரம்பரையாக மேட்டு நிலத்தில் மிளகாய், கத்தரி, வெண்டி, பயற்றை, வெங்காயம், உள்ளிட்ட பயிர்களை மேற்கொண்டு வரும் நிலையில், இம்முறை மேற்கொண்டுள்ள மிளகாய் செய்கையில் ஒருவித வாடல் நோய் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்நோய் காரணமாக மிளகாய் செடிகள் நன்கு பூத்து காய்க்கும் நிலைக்கு வரும் வேளையில், திடீரென வாடிப் போய் விடுகின்றன. இதனால் தாம் பெரும் நட்டத்தை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

அதிக உஷ்ணம் காரணமாகவும் பங்கஸ் தாக்கத்தினாலும், மிளகாய் செடிக்கு இந்த நோய் ஏற்படுவதாக விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

மிளகாய் செய்கை இடை நடுவில் இவ்வாறு கைவிடப் படுவதனால் மரவள்ளி போன்ற மாற்றுப் பயிரிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# அஸீஸா பவுண்டேசன் ஏற்பாட்டில் உணவுப் பொருட்கள் விநியோகம்

மட்டக்களப்பு, செப். 02

ஜேர்மன் முஸ்லிம் ஹெல்பன் அமைப்பின் மற்றுமொரு நிவாரணப் பணிகள் நாவிதன்வெளி மத்திய முகாம் பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றது.

ஹசன் மௌலவி நற்பணி மற்றத்தின் அஸீஸா பவுன்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் சாதிக் ஹஸனால் நளீர் பவுண்டேசன் அமைப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க மத்திய முகாம் பிரதேசத்தில் வாழும் சுமார் 200 குடும்பங்களுக்கு உலர்உணவுப் பொதிகள் சளம்பைக்கேணி அஸ்ஸிராஜ் தேசிய பாடசாலை மைதானத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதன் முதற்கட்டமாக முதலாம் வட்டாரம், இரண்டாம் வட்டாரம், மூன்றாம் வட்டாரம், மத்திய முகாம் ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு நளீர் பவுன்டேசன் அமைப்பினருடன் இணைந்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அஸீஸா பௌன்டேசன் பணிப்பாளர் சாதிக் ஹஸன், அதன் உறுப்பினர்கள், நளீர் பவுன்டேசன் அமைப்பின் தலைவர் எம்.ஏ.ரஹீம், அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ஏ.நளீர், மற்றும் அதன் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)



ஈழநாடு



# விண்வெளியில் நெற் செய்கை!

## சாதனை படைத்த சீன விஞ்ஞானிகள்

பீஜிங், செப். 02

**சீனா அமைத்து வரும் டியாங்கொங் விண்வெளி நிலையத்தில் நெற்பயிரை வளர்த்து விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். பூச்சிய புவியீர்ப்பு விசை கொண்ட ஆய்வகத்தில் விதைகளை கொண்டு நெற்பயிரை வளர்த்து இந்த சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளது.**



இந்தச் சோதனையானது, நீண்டகால விண்வெளிப் பயணங்களுக்கு உதவும் வகையில் உணவு உற்பத்தியை விண்வெளியில் மேற்கொள்வதற்கான அறிவியல் முயற்சியின் முதல் படியாக அமையலாம் என சைனா டெய்லி தெரிவித்துள்ளது.

விண்வெளியில் நெற்பயிர் செய்கை சோதனைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ள போதிலும் டியாங்கொங் விண்வெளி நிலையத்தில் நெல் விதைப்பில் இருந்து அறுவடை வரையான ஒரு முழுச் சுழற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது இதுவே முதன் முறையாகும் எனவும் சைனா டெய்லி அறிக்கையிட்டுள்ளது.

பீஜிங், விண்வெளியின் சுற்று வட்ட பாதையில் நிரந்தர விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்துடன் சீனா பணியாற்றி வருகிறது. இதன் கட்டுமானப் பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை.

இந்நிலையில் சீன விண்வெளி நிலையத்தில் பூச்சிய புவியீர்ப்பு விசை கொண்ட வென்ஜியான் என்ற ஆய்வகத்தில் விதைகளை கொண்டு நெற்பயிர்களை உருவாக்கும் முயற்சியில் சீன விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

இதற்கான பணிகள் கடந்த ஜூலையில் தொடங்கின. இதற்காக இரு வகை செடிகளின் விதைகளை அவர்கள் பயன்படுத்தி உள்ளனர். தாலே கிரஸ் மற்றும் அரிசி வகை செடியை உற்பத்தி செய்யும் பணியானது தொடங்கியது.

இதில், தாலே கிரஸ் 4 இலைகளை உற்பத்தி செய்தது. இந்த செடியானது, முட்டைக்கோவா போன்ற பசுமையான இலைகளை கொண்ட காய்கறிகளை ஒத்தது. ஆனால், அரிசி விதையானது 30 செ.மீ. உயரத்திற்கு வளர்ந்தது விஞ்ஞானிகளை ஆச்சரியமடைய செய்துள்ளது.

விண்வெளியில் கதிரியக்கங்கள் அதிக அளவில் இருக்கும். இந்த சூழலில், தாவரங்கள் எப்படி செயற்படுகின்றன என்பது பற்றி புரிந்து கொள்வதற்காக சீன விஞ்ஞானிகள் வாழ்க்கை அறிவியல் பரிசோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விண்வெளியில் தலா இரு தாவரங்களின் வாழ்க்கை சுழற்சி பற்றி இரண்டு பரிசோதனைகள் வழியே பகுப்பாய்வு செய்யப்படும். அவற்றை வளர்க்க நுண்ணிய ஈர்ப்பு விசை கொண்ட சுற்றுச் சூழல் அமைப்பினை எப்படி பயன்படுத்தலாம் என்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பது பற்றியும் அறியப்படும் என இந்த முயற்சி குறித்து கருத்து வெளியிட்ட சீன அறிவியல் ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர் ஜெங் ஹூகியாங் தெரிவித்துள்ளார்.

பூமி போன்ற சூழலை ஒத்த, செயற்கைச் சுற்றுச்சூழலை கொண்டு மட்டுமே இந்த பயிர்களை வளர்க்க முடியும். செடிகளின் வளர்ச்சியை ஒப்பிட்டு, விண்வெளியில் தகவமைத்து கொள்ளும் வகையிலான கூடுதல் பயிர்களை ஆய்வின் வழியே நாம் கண்டறிய முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விண்வெளியில் தாவர விதைகள் பரிசோதனையில் சீனா ஈடுபடுவது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு ஜூலையில், விண்வெளியில் இருந்து திருப்பி கொண்டு வந்த விதைகளை வைத்து முதல் தொகுதி அரிசியை அறுவடை செய்தது.

சொர்க்கத்தில் இருந்து வந்த அரிசி என பெயரிடப்பட்ட இந்த வகை அரிசிக்கான 40 கிராம் விதைகள், 7.6 இலட்சம் கி.மீ. தொலைவுக்கு நிலவுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்பு பூமிக்கு திரும்பி கொண்டு வரப்பட்டது.

அதிக கதிரியக்கங்கள், புவியீர்ப்பு விசையற்ற சூழல் போன்ற சுற்றுச்சூழலில் விண்வெளியில் சீன விஞ்ஞானிகள் அரிசியை உற்பத்தி செய்து இருப்பது விஞ்ஞான வளர்ச்சியின் அடுத்த நிலையாக உற்று நோக்கப்படுகிறது. (அ)

# ஐரோப்பாவுக்கான எரிவாயுவை முற்றிலுமாக நிறுத்தியது ரஷ்யா!



மொஸ்கோ, செப். 02

பழுதுபார்ப்பு தேவை என்று கூறி, ஐரோப்பாவுக்கான எரிவாயு விநியோகத்தை ரஷ்யா முற்றிலுமாக நிறுத்தியுள்ளது.

ரஷ்ய அரசாங்கத்துக்கு சொந்தமான எரிசக்தி நிறுவனமான காஸ்ப்ரோம், நோர்ட் ஸ்ட்ரீம்-1 குழாய்த் திட்டம் மீதான கட்டுப்பாடுகள், அடுத்த மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என்று கூறியுள்ளது.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான போர் ஆயுதமாக எரிசக்தி விநியோகத்தைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் செய்தித் தொடர்பாளர், பொருளாதாரத் தடைகளால் ஏற்படும் தொழில்நுட்ப சிக்கல்கள் தான் ரஷ்யாவை குழாய் வழியாக எரிவாயு வழங்குவதைத் தடுக்கும் ஒரே விடயம் என அவர் கூறியுள்ளார்.

ரஷ்யா ஏற்கனவே குழாய் வழியாக எரிவாயு விநியோகத்தை கணிசமாகக் குறைத்துள்ளது.

பழுதுபார்ப்பதற்காக, ஜூலையில் 10 நாட்களுக்கு குழாய் மூடப்பட்டது. மீண்டும் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், 20 சதவீத திறனில் இயங்கியது. தற்போது முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது.

நோர்ட் ஸ்ட்ரீம் 1 குழாய்த் திட்டம், பால்டிக் கடலின் கீழ் செயின்ட் பீற்றர்ஸ் பேர்க்கிற்கு அருகிலுள்ள ரஷ்ய கடற்கரையிலிருந்து வடகிழக்கு ஜேர்மனி வரை 1,200 கி.மீ. (745 மைல்கள்) நீண்டுள்ளது. இது 2011ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. மேலும் ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 170 மில்லியன் கன மீற்றர் எரிவாயுவை அனுப்ப முடியும். (அ)

# புரட்சியாளர் சேகுவேராவின் மகன் கமிலோ உயிரிழந்தார்

ஹவானா, செப். 02

ஆர்ஜென்ரீனாவில் பிறந்து கியூபப் புரட்சியில் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து போராடிய சேகுவேராவின் மகன் கமிலோ குவேரா உயிரிழந்தார்.

நுரையீரலில் இரத்தம் உறைந்ததால் ஏற்பட்ட மாரடைப்பால் அவர் உயிரிழந்ததாக கியூபா அதிகாரிகள் தெரிவித்தனர்.

கியூபப் புரட்சியில் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து போராடிய தனது தந்தையின் வாழ்க்கை வரலாற்றை ஆவணப்படுத்துவதற்காக தனது வாழ்நாளின் பெரும் பகுதியை கமிலோ குவேரா அர்ப்பணித்தார்.

ஆர்ஜென்டிரீனாவில் பிறந்த சேகுவேரா, புல்ஜென்சியோ பாடிஸ்டாவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான வெற்றிகரமான போராட்டத்தில் பிடல் மற்றும் ரவுல் காஸ்ட்ரோவுடன் இணைந்து கியூபா புரட்சியின் மிகவும் முக்கியமான நபராக இருந்தார். பொலிவியாவில் சேகுவேரா சுட்டுக் கொல்லப்பட்டபோது கமிலோவுக்கு ஐந்து வயதே நிரம்பியிருந்தது.

சேகுவேராவுக்கு நான்கு மனைவிகள். இரண்டாவது மனைவியான அலீடா மார்ச் உடன் இணைந்து அவர் பெற்ற நான்கு பிள்ளைகளில் கமிலோவும் ஒருவர். அவரது மூத்த சகோதரி அலீடா குடும்பத்தின் செய்தித் தொடர்பாளராகப் பொறுப்பேற்றார். கமிலோ கியூபா தலைநகரம் ஹவானாவில் சேகுவேரா ஆய்வு மையத்தை வழிநடத்தி வந்தார்.

ஆல்பர்டோ கோர்டா புகைப்படத்தால் பிரபலமான தனது தந்தையின் படத்தை சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவதை கமிலோ குவேரா எதிர்த்தார்.

இந்த நிலையில் வெனிசுலா நாட்டுக்கு சென்றிருந்த கமிலோ சேகுவேரா கடந்த திங்கட்கிழமை நுரையீரல் இரத்த உறைவு காரணமாக மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக கியூப அரசு செய்தி நிறுவனமான பிரென்சா லத்தினா தெரிவித்துள்ளது.

கமிலோவின் மறைவுக்கு கியூபா ஜனாதிபதி மிகுவல் டியாஸ் கேனல் இரங்கல் தெரிவித்துள்ளார். ஆழ்ந்த வலியுடன் சேகுவேராவின் மகனும் அவரது யோசனைகளை ஊக்குவிப்பவருமான கமிலோவிடம் நாங்கள் விடை பெறுகிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

### உய்குர் முஸ்லிம்கள் விவகாரம்

# மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் புரிந்தது சீனா!

ஜெனிவா, செப். 02

தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான காவலில் உள்ள உய்குர் முஸ்லிம்கள் மற்றும் ஜின்ஜியாங் பிராந்தியத்தில் உள்ள பிற முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மூலம் சீனா மனித குலத்துக்கு குற்றங்களை இழைத்திருக்கலாம் என பதவி விலகிச் செல்லும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சலெட் வெளியிட்ட நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சீனா தொடர்பில் மிக மென்போக்குடன் நடந்து கொண்டதற்காக சில இராஜதந்திரிகள் மற்றும் உரிமைக் குழுக்களின் விமர்சனங்களை மிச்சேல் பச்சலெட் எதிர்கொண்டுள்ளார்.

இந்நிலையில் தனது நான்கு வருட பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் நேற்று முன் தினம் சீனா தொடர்பான அறிக்கையை அவர் வெளியிட்டார்.

கடந்த மே மாதம் மிச்சேல் பச்சலெட் சீனாவுக்குச் சென்று மேற்கொண்ட பயண ஆய்வுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை அமைந்துள்ளது.


தீவிரவாத எதிர்ப்பு உத்தி என்ற பின்னணியில் ஜின்ஜியாங் பிராந்தியத்தில் கடுமையான மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன என 48 பக்கங் களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமை கள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உய்குர் முஸ்லிம்கள் மற்றும் பிற பெரும்பான்மையான முஸ்லிம்கள் தன்னிச்சையான மற்றும் பாரபட்சமான தடுப்புக்காவல்களின் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிரான குற்றங்கள் சர்வதேச குற்றங்களாக இருக்கலாம். குறிப்பாக மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றிருக்கவலாம் எனக் கருதப்படுவதாக ஐ.நா. அலுவலகம் கூறியுள்ளது.

சிறைச்சாலைகள் அல்லது தடுப்புக் காவல்களில் வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு சீன அரசாங்கத்திற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சலெட் பரிந்துரைத்தார்.

ஜின்ஜியாங் பிராந்தியத்தில் பிராந்தியத்தில் 2017 ஆம் ஆண்டு முதல் குடும்பக் கட்டுப்பாடு கொள்கைகளை வலுக்கட்டாயமாக அமுல்படுத்துவதன் மூலம் அந்த மக்களின் உரிமைகள் மீறப்பட்டதற்கான நம்பகமான அறிகுறிகள் உள்ளன ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கூறியுள்ளது. (அ)



# அமெரிக்க ஓப்பன் நடால் முன்னேற்றம்!

நியூயோர்க், செப். 02

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் பிரபல வீரர் ரபேல் நடால் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லம் போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில், உலகின் இரண்டாம் நிலை வீரரும், 22 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றவருமான ரபேல் நடால் முதல் சுற்றில் வெற்றி பெற்றார்.

ஸ்பெயினின் ரபேல் நடால் முதல் சுற்றில் அவுஸ்திரேலியாவை சேர்ந்த ரிங்கி ஹிஜிகடாவை எதிர் கொண்டார்.

ரிங்கி முதல் செற்றை 6-4 என்ற கணக்கில் வென்று அதிர்ச்சி கொடுத்தார். ஆனால், பின்னர் நடால் சுதாகரித்து விளையாடி தொடர்ந்து 3 செற்களையும் 6-2, 6-3, 6-3 என்று வென்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார். (ஐ)

## இந்தியாவுடனான தொடர்:

# அவுஸ்திரேலிய அணியில் டேவிட் வோர்ணருக்கு ஓய்வு

சிட்னி, செப். 02

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருபது - 20 கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி. இந்தத் தொடருக்கு 15 வீரர்கள் அடங்கிய அணியை அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதில் நட்சத்திர வீரரும், தொடக்க ஆட்டக்காரருமான வோர்ணருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதே நேரத்தில் அவுஸ்திரேலிய அணிக்காக ரிம் டேவிட் அறிமுக வீரராக களம் காண்பார் எனத் தெரிகிறது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மூன்று போட்டிகள் இருபது -20 தொடரில் விளையாட இந்தியா செல்லவுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் 20, 23 மற்றும் 25 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.



இந்தத் தொடர் மொகாலி, நாக் பூர் மற்றும் ஹைதராபாத் போன்ற நகரங்களில் உள்ள மைதானங்களில் நடைபெற உள்ளது. இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கு சரியான முறையில் இரு அணிகளும் தயாராகும் வகையில் இந்தத் தொடர் அமைந்துள்ளது.

அணி விவரம்: அரோன் பின்ஞ், அஸ்ரன் அகர், பட் கம்மின்ஸ், ரிம் டேவிட், ஜோஷ் ஹசல்வூட், இங்க்லீஸ், மிற்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், கேன் ரிச்சர்ட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிற்செல் ஸ்ரோர்க், மார்கஸ் ஸ்ரொய்னிஸ், மத்தியூ வேட், அடம் சம்பா மற்றும் கமரூன் கிறீன். (ஐ)

# கோலி - சூரியகுமார் அதிரடி; சுப்பர் - 4 சுற்றில் இந்தியா!



சார்ஜா, செப். 02

ஆசிய கோப்பை இருபது - 20 தொடரில் தனது 2ஆவது போட்டியில் ஹொங்கொங் அணியை ஓட்டங் கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சுப்பர் - 4 சுற்றுக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

இந்திய அணி விதித்த 193 ஓட்டங்கள் இலக்கை துரத்திய ஹொங்கொங் அணிக்கு நல்ல தொடக்கம் அமையவில்லை. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய அந்த அணி வீரர் யாசிம் முர்தாசாவை அர்ஷதீப் சிங் 2வது ஓவரிலேயே ஆட்டமிழக்க செய்ய, அடுத்த சில ஓவர்களில் கப்டன் நிஜாகத் கான் ரன் அவுட் செய்யப்பட்டார்.

அடுத்து இறங்கிய பாபர் ஹயாத் மற்றும் கிஞ்சித் ஷா இருவரும் அணியை சரிவிலிருந்து மீட்கப் போராடி னர். ஆனால், அவர்களின் உழைப்பு நீண்ட நேரம் கைகொடுக்கவில்லை. 41 ஓட்டங்கள் எடுத்த ஹயாத்தை ரவீந்திர ஜடேஜாவும், 30 ஓட்டங்கள் எடுத்திருந்த ஷாவை புவனேஷ்வர் குமாரும் வெளியேற்றினர்.

இதன்பின் ஜீஷன் அலி ஓரளவு தாக்குப்பிடித்து விளையாடினாலும், அதற்குள் 20 ஓவர்கள் முடிந்துவிட்டது. இதனால் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. 20 ஓவர்களில் ஐந்து விக்கெட்களை இழந்த ஹொங்கொங் அணி 152 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இந்திய தரப்பில் 6 பந்துவீச்சாளர்கள் பயன்படுத் தப்பட்டனர். 6ஆவது பந்துவீச்சாளராக விராட் கோலி ஓர் ஓவர் பந்துவீசினார். 17 ஆவது ஓவராக வீசிய அவர் 6 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். விக்கெட் ஏதும் வீழ்த்தவில்லை.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஏ பிரிவில் இடம்பிடித்துள்ள இந்திய அணி தனது முதல் லீக் போட்டியில் பாகிஸ்தானை 5 விக்கெட்கள் வித்தியா சத்தில் வீழ்த்தியிருந்தது.

இந்நிலையில், இந்திய அணி தனது 2ஆவது ஆட்டத் தில் ஹொங்கொங் அணியை வீழ்த்தியதன் மூலம் சுப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

ஏற்கனவே ஆப்கானிஸ் தான் அணி சுப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற ஹொங் கொங் அணி முதலில் பந்து வீச்சைத் தெரிவு செய்தது. இதன்படி களமிறங்கிய இந்திய அணிக்கு ரோஹித் சர்மா - கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது.

ஆரம்பத்தில் அதிரடியாக ஆடிய ரோஹித் சர்மா அதே வேகத்தில் வெளியேறினார். அவருக்கு அடுத்தாக கோலியுடன் கூட்டணியமைத்த கே. எல். ராகுல் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் பெரிய ஓட்ட எண்ணிக்கையை எட்டவில்லை. ரோஹித் 21 ஓட்டங் களிலும், கே.எல்.ராகுல் 36 ஓட்டங்களிலும் ஆட்ட மிழந்தனர். இந்நிலையில், ஆட்டத்தை விராட் கோலியும், சூர்யகுமார் யாதவும் கைப்பற்றினர்.

இருவரும் இணைந்து ஹொங்கொங் பந்துவீச்சா ளர்கள் வீசிய பந்தை நாலுபுறமும் விரட்டி அடித்தனர். அந்த வகையில் நீண்ட நாட்களாக தனது வழக்கமான ஆட்டத்துக்கு திரும்பாமல் விமர்சனங்களை எதிர் கொண்ட விராட் கோலி தற்போது மீண்டும் அரை சதத்தை அடித்து அதிரடி காட்டினார். இதேபோல சூர்ய குமார் யாதவும் அதிகவேகமாக அரைசதத்தை அடித்ததுடன், கடைசி ஓவரில் ஹட்ரிக் சிக்ஸர்களை விளாசினார். இதையடுத்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் இந்திய அணி 2 விக்கெட்களை இழந்து 192 ஓட்டங்களை குவித்தது. இதில் சூர்யகுமார் யாதவ் 26 பந்துகளில் 68 ஓட்டங்களையும், விராட் கோலி 44 பந்துகளில் 59 ஓட்டங்களையும் எடுத்தனர். (ஐ)



# வைரம் பதித்த காலணியுடன்

## போட்டியில் பங்கேற்ற செரீனா

நியூயோர்க், செப். 02

நடப்பு அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில்மூத்த ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வைரக் கற்கள் பதித்த காலணி அணிந்து விளையாடியுள்ளார்.

இது அவர் பங்கேற்று விளையாடும் கடைசி அமெரிக்க ஓப்பன் தொடராக அமைந்துள்ளது. அவர் ஓய்வு குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதே இதற்கு காரணம்.

அமெரிக்க நாட்டை சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், மகளிர் ஒற்றையர் பிரிவில் 23 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றுள்ளார். மகளிர் இரட்டையர் பிரிவில் 14 முறை கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றுள்ளார். அத்தோடு கலப்பு இரட்டையர் பிரிவில் இரண்டு கிராண்ட்ஸ்லம் பட்டங்களையும் அவர் வென்றுள்ளார்.

நடப்பு அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்றுப் போட்டியில் டேங்கா கோவினிக்கை எதிர்த்து அவர் விளையாடினார். 6-3, 6-3 என நேர் செற் கணக்கில் இந்தப் போட்டியில் செரீனா வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர் தனது ரசிகர்களை கவர்ந்திருந்தார்.

அத்துடன், இந்தப் போட்டியில் அவர் அணிந்து விளையாடிய ஆடை மற்றும் காலணியும் ரசிகர்களின் கவனத்தை பெற்றது. இந்த தொடருக்காக பிரத்தியேகமாக வைரக்கற்கள் பதித்த கறுப்பு நிற காலணியை அவர் அணிந்திருந்தார். இந்த காலணியை நைக் நிறுவனத்துடன் இணைந்து அவர் வடிவமைத்துள்ளார். அதில் லேஸ் கட்டும் பகுதியில் 'Mama' மற்றும் 'Queen' என பிரத்யேகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## தம்பிஐயா இராசரட்ணம்

(இளைப்பாறிய ஆசிரியர்)



**மலர்வு** **05.04.1930** **உதிர்வு** **30.08.2022**

தென்மயிலை கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் திரு. தம்பிஐயா இராசட்ரணம் கடந்த 30.08.2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான, தம்பிஐயா – பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா, சபாரட்ணம், அன்னம்மா, சின்னத்துரை, நல்லம்மா, பரமேஸ்வரி, பரராஜசிங்கம் மற்றும் புவனேஸ்வரி (கனடா), ஞானவள்ளி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவளம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஜகுமார் மற்றும் சந்திரகுமார் (நெதர்லாந்து), சிவகுமார் (பிரான்ஸ்) பிறேம்குமார் (அவுஸ்திரேலியா), கௌரி (கனடா), இராசகுமார் (கனடா) காலஞ்சென்ற இராம்குமார் மற்றும் மாலதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரஞ்சனா, கௌரி, இரதி, கோமதி, சிவராஜசிங்கம், சுபோதினி, ரஜனி, ரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜனன், கிசான், அனுசாந், ஜெகந்தன், நிருபன், இலட்சன், சிவானி, பிரகாஸ், பிரியா, அரவிந், ஆசா, ஜஸ்மிகா, தானியா, அபிசேக், திபிகா, டிசானா, அபிர்னா ஆகியோரின் பாசமிகு பேரனும், அனையிலாவின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் PLACE- 55, Rue Gince, Montreal, Québec H4N 1j7 எனும் முகவரியில் நாளைமறுதினம் 03.09.2022 சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிமுதல் பிற்பகல் 9.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரை கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு :
**மோகன் (கனடா) - 0016137629326**
**கௌரி (கனடா) - 0016479246605**
**அல்லி (கனடா) - 004388755667**

தகவல் :
**குடும்பத்தினர்.**




# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை கிருஷ்ணமூர்த்தி



**மலர்வு** **30.05.1945** **உதிர்வு** **30.08.2022**

யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zürich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கிருஷ்ணமூர்த்தி கடந்த 30-08-2022 செவ்வாய்க்கிழமை குப்பிளானில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற ஐயாத்துரை – சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்ற உலகநாதர் – கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகரட்ணத்தின் பாசமிகு கணவரும், மேகவர்ணன், கிருஸ்ணவாணி, கிருஷ்ணராணி, கிருஸ்ணதசணி, கிருஸ்ணமேனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாரணி, சிறிதரன், கலைதாசன், சிவகுமார், சுதர்னி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பரமேஸ்வரி, நகுலேஸ்வரி, தங்கவேல் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான நா.இராசையா, உ.இராசையா மற்றும் பொன்மலர், காலஞ்சென்றவர்களான சவுந்தரம், இராசையா, கதிரமலை, சுப்பிரமணியம் மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாருணியா, சிமித், அஸ்மிலா, அனுநிதா, அபிரணியா, மிதுசிகா, அனிசன், விசால், வர்சா, வெண்ணிலா, ஆருசன், வர்ணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (02.09.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 01.00 மணியளவில் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊரங்குனை,
குப்பிளான் வடக்கு,

தொடர்புகளுக்கு :
**மேக்கா - மகன் - +94741765752**

தகவல்:
**மேக்கா - மகன்**

## கடன்...

கோடி டொலரை வழங்குவது என்றால் சீனா உட்பட இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் அனைத்தும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு இணங்கவேண்டும்.

கடன் வழங்கிய ஒரு நாடு உத்தரவாதம் அளிக்க மறுத்தாலும் அது இலங்கையின் நெருக்கடிகளை தீவிரப்படுத்தும். மீளத் திருப்பி கொடுக்கும் திறனை பாதிக்கும் என சர்வதேச நாணய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவின் சிரேஷ்ட அதிகாரி பீற்றர் பிரேயர் தெரிவித்துள்ளார்.

சீனா கொழும்பின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன நடக்கும் என்ற செய்தியாளரின் கேள்விக்கே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நெருக்கடி தீவிரமடைந்தால் கடன்களை செலுத்துவதற்கான வளங்கள் குறைவடையும் என்று தெரிவித்துள்ள அவர், இலங்கையுடன் ஒத்துழைப்பது கடன்வழங்கிய நாடுகள் அனைத்தின் நலனுக்கும் உகந்த விடயம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அரச...

என்று வரவு - செலவு திட்ட முன்மொழிவு மூலம் படைகளை பல வீனப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு இதே போன்ற பிரேரணை கொண்டுவரப்பட்டு ஆயுதப் படைகளின் பலத்தை குறைக்க முயற்சிக்கப்பட்டது. அப்போது நாங்கள் விசாரித்தபோது, பலத்தை குறைக்கவில்லை, ஆனால், படைகளை தேவையான பலத்துக்கு கொண்டு வருவதாக அவர்கள் கூறினார் கள். அவர்கள் மீண்டும் இராணுவத்தை சேதப்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஊழல் நிறைந்த அரசியல் கலாசாரத்தில் இருந்து நாட்டை மீட்கும் வரை போராட்டத்தை தொடர வேண்டும். சர்வதேச சமூகம் தலையிட்டு அரச பயங்கரவாதத்தை நிறுத்தவும், மக்களை கைது செய்வதை நிறுத்தவும் வேண்டும்.

"பயங்கரவாதத்தை அரசாங்கம் நிறுத்தும் வரை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு ஒரு டொலர் கூட அனுப்ப வேண்டாம் என்று நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார். (ஐ)

## இலங்கையை...

காலமாக ஐ. நாவில் தங்களுக்கான நீதியை கோரி போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு தங்களுடைய ஆதரவு நிலை எப்படி இருக்கும்?" என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த லிஸ் ட்ரஸ் அம்மையார்,

"நான் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் உறுதியாக இருக்கிறேன்.

வெளிவிவகார அலுவலர்களுக்கான செயலாளரைத் தெரிவு செய்யும்போது இந்த விடயத்தில் நான் அதிக கவனம் செலுத்துவேன்." என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, அண்மையில் அனைத்து தமிழ்த் தரப்பினரும் ஒன்றிணைந்து சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையை பாரப்படுத்த ஐ. நா. பாதுகாப்புச் சபையை தூண்டும் பிரேரணையை நிறைவேற்றக் கோரி பிரதான அங்கத்துவ நாடுகளுக்கு வரைவு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கான பிரேரணையை நிறைவேற்றுவதில் பிரதான நாடாக பிரித்தானியா தலைமை வகிக்கிறது. பிரித்தானியாவின் எதிர்கால பிரதமராக லிஸ் ட்ரஸ் தெரிவு செய்யப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த சந்திப்பும் லிஸ் ட்ரஸ் அம்மையாரின் உறுதிமொழியும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (ஐ)

## விபத்தில்...

அத்துடன், இந்த விபத்தில் இளம் தாயும் அவரின் 3 வயது குழந்தையும் காயங்களுக்கு இலக்கான நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்திவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இலங்கைக்கான...

வரும் கடனில் இருந்து விடுபட்டு நிலையான அபிவிருத்தியை அடை வதற்கான முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளின் ஆதரவு மிகவும் அவசியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## 290 கோடி...

இந்தக் கடன் தொகையானது நாட்டின் பொருளாதார ஸ்திரதன்மை மற்றும் கடன் நிலைத் தன்மையை மீட்டு எடுப்பதற்கான வேலைத் திட்டத்தை ஆதரிக்கும் அதேவேளை, நிதி ஸ்திரதன்மையை பாதுகாத்தல் ஊழல் பாதிப்புக்களை குறைத்தல், வளர்ச்சி திறனை திறத்தல் - மேம்படுத்தும் திட்டத்துக்கு ஆதரவளிக்கும். இந்த உடன்படிக்கை சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டே வழங்கப்படும்.

மேலும், இந்தத் திட்டத்துக்கு அமைய

இலங்கை வரி சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பெருநிறுவன வரி, வற் வரி ஆகியவற்றுக்கான தளத்தை விரிவுபடுத்துதல் வேண்டும். அத்துடன், 2024ஆம் ஆண்டுக்குள் 2.3 வீத முதன்மை அபவிருத்தியை எட்டுவது இதன் பிரதான நோக்கமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், அரச நிறுவனங்களில் எரிபொருள், மின்சார செலவை அடிப்படை தொகையை அறிமுகப்படுத்தல். சமூக செலவினங்களை உயர்த்தும்போது பாதிக்கப்படுவோர் - ஏழைகள் மீதான தாக்கத்தை தணித்தல், அவர்களுக்கான பாதுகாப்பு நிகர திட்டங்கள் மூலம் இலக்குகளை மேம்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 24ஆம் திகதி இலங்கை வந்த சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் நேற்றுவரை நாட்டில்தங்கியிருந்தனர். அவர்கள் இலங்கை அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியதன் விளைவாக இந்தக் கடன் வழங்கப்பட்டது. (ஐ)

## பிரச்சினைகளு..

சந்தேக நபர்களை விடுதலை செய்தல் அல்லது அவர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்ட ஆலோசனை சபையின் செயல்பாடுகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் கோரியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மேலும்,

" புலம்பெயர் தமிழ் மக்களுடன் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களில் ஒன்று கைதிகள் தொடர்பான விடயமாகும். முன்னாள் ஜனாதிபதி இந்தக் குழுவை நியமித்தார். நான் அவர்களுடன் பேசினேன், அதன் செயல்முறையை விரைவுபடுத்தவும், அதன் பணியை விரைவில் முடிக்கவும் கேட்டுக்கொண்டேன்.

"புலம்பெயர்ந்து வாழும் மக்களுடனான பேச்சு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. அவர்களும் விவாதங்களில் திருப்தி அடைந்துள்ளனர். வெளிநாடுகளில் சந்திக்காமல் யாழ்ப்பாணத்திலேயே இந்தப் பிரச்னையைத் தீர்க்கக் கூட்டங்களை நடத்துமாறு அவர்களை அழைத்தேன். எங்கள் பிரச்னைகளை நாமே தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். தற்போது கட்சிகளுக்கு இடையே நம்பிக்கை மற்றும் நல்லுறவை வளர்ப்பதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம் - என்றும் கூறினார். (ஐ)

# நாட்டில் தன்னிறைவை ஏற்படுத்தி உணவு விலையை குறைக்க வேண்டும்

### வர்த்தக அமைச்சர் நளின்

கொழும்பு, செப். 02

தற்போது நாட்டில் உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு நிலையை உருவாக்கி உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும் என்று வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று வர்த்தக அமைச்சில் நடைபெற்ற உணவுப் பாதுகாப்புக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் விவசாயம், கால்நடைகள் மற்றும் மீன்பிடித் துறைகளில் உள்ள பிரச்னைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சர் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

கைத்தொழில் துறைக்கு தேவையான சீமெந்து, இரும்பு போன்ற மூலப்பொருட்களின் விலை தொடர்பில் நிலவும் பிரச்னையை தீர்க்க எதிர்வரும் வாரத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் இந்த சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# மானிப்பாய் மகளிர் கல்லூரியில் திறன் வகுப்பறை திறப்புவிழா!

யாழ்ப்பாணம், செப். 02

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்காக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையின் செயல்பாடுகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்தத் திறன் வகுப்பறை ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பௌண்டேசன் மற்றும் இராமலிங்கம் பௌண்டேசனின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் திருமதி சுனித்ரா சூரியராஜா தலைமையில் நடைபெற்ற திறன் வகுப்பறை செயல்பாடு ஆரம்ப நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் முரளிதரன், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற வலயக்கல்வி பணிப்பாளர் சு. கிருஷ்ண குமார் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தி அலுவலக பெண் ஊழியர் சடலமாக மீட்பு

### மாவட்ட அமைப்பாளர் கைது

கொழும்பு, செப். 02

ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை அலுவலகத்தில் பெண்ணொருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டமை தொடர்பில் அந்தக் கட்சியின் கேகாலை அமைப்பாளர் லக்ஷ்மன் திஸநாயக்க கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்சி அலுவலகத்தில் நேற்று காலை துப்பாக்கி சூட்டு காயங்களுடன் 36 வயது பெண்ணொருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டனர்.

கேகாலை ஹபுதுவலயை சேர்ந்த பெண் துப்பாக்கி சூட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

விசாரணைகளின் போது கட்சியின் தொகுதி அமைப்பாளர் அந்த பெண்ணை அவரின் வீட்டிலிருந்து அழைத்து வந்தமை தெரியவந்துள்ளது இதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளுக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# சிகரெட் விலை அதிகரிப்பு

கொழும்பு, செப். 02

சிகரெட் ஒன்றின் விலையை அவற்றின் வகைகளுக்கு ஏற்ப 4 வகைகளின் அடிப்படை யில் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, சிகரெட் ஒன்றின் விலையை 3, 5, 10 மற்றும் 15 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வற் வரி 12 சதவீதத்தில் இருந்து 15 சதவீத மாக அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக சிகரெட் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாளை...

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜூலை 9ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் போராட்டங்களை தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறி ஜூலை 13ஆம் திகதி தனது பதவியை துறந்தார். சிங்கப்பூரில் சில நாட்கள் தங்கியிருந்த அவர், பின்னர் தாய்லாந்துக்கு சென்றார். தற்போது அங்கே தங்கியுள்ள நிலையிலேயே நாளை நாடு திரும்புவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 3 மாதங்களில் மட்டும் 15 கொலை குற்றங்கள்!

கொழும்பு, செப். 02

இந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஒகஸ்ட் 31ஆம் திகதி வரையான மூன்று மாதங்களில் காலி மாவட்டத்தில் 15 கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவற்றில் 12 கொலைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நிகழ்ந்தன. ஏழு கொலைகள் அம்பலாங்கொடை பிரதேசத்திலும், மற்ற மூன்றும் கூரிய ஆயுதங்களால் செய்யப்பட்ட கொலைகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# அரச தரப்புக்குள் இன்னமும் ஊழல்!

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 02

அரசாங்க தரப்புக்குள் இன்னமும் ஊழல் தலைதூக்குவதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. பாராளுமன்றில் தெரிவித்தார்.

1.4 பில்லியன் அமெரிக்க டொலருக்கு நிலக்கரி கொள்முதல் செய்வதற்கான விலைமானுக்கோரல் நடைமுறைகளை மீறி வழங்கப்பட்டதாகவும், அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் தரம் குறைவாக இருப்பதாகவும், அதில் ஊழல் நடந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கிலி அபகரிப்பு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

போராட்டக்காரர்களைக் கையாளும் சூழலில் ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (அ)

# தனிநாயகம் அடிகளாரின் நினைவேந்தல் வவுனியாவில்



வவுனியா, செப். 02

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருடைய 42ஆவது வருட நினைவு தினம் வவுனியாவில் நகர மத்தியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை 08.30 மணிக்கு நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தமிழ் அருவி சிவகுமாரனால் சிறப்புரையும் நிகழ்த்தப்பட்டது.

நகரசபை உபதலைவர் ஆ. குமாரசாமி, நகரசபை உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம், சுமந்திரன், மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கென்னடி, தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நிந்தவூர் பிரதான வீதியில் விபத்து; பல்கலை மாணவி ஸ்தலத்தில் பலி!

அம்பாறை, செப். 02

நிந்தவூர் பிரதான வீதியில் துரைட்மூலை என்னும் இடத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது வாகனமொன்றுடன் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

காத்தான்குடி-5, மீராப்பள்ளி வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய அக்பர் அலி பாத்திமா அஸ்பா என்ற மாணவியே இந்த விபத்தில் மரணமானவராவார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட விடுதி மாணவியான இவர் இரண்டாவது பருவகால அமர்வின்பொருட்டு தனது கணவருடன் காத்தான்குடியிலிருந்து நேற்று முன் தினம் காலை 6.00மணியளவில் புறப்பட்டு நிந்தவூரினூடாக பல்கலைக்கழகத்துக்கு பயணித்துக்கொண்டிருந்தபோதே வாகனமொன்றுடன் மோதுண்டு உயிரிழந்தார். (அ)

# இலங்கையில் வசிக்கும் 3/10 பேர் உணவுப் பாதுகாப்பற்ற சூழலில்!

### ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

நியூயோர்க், செப். 02

உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடியினால் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவுத் திட்டத்தின் செயலாளர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய நடுத்தர வருமான நாடுகளை விட இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 90 சதவீதத்தை எட்டியுள்ளதால் அது வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புத் திட்டங்களை பாதித்துள்ளதாகவும் இதனால் மில்லியன் கணக்கான மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கிட்டத்தட்ட 6.3 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பற்றவர்களாகவும் உதவி தேவைப்படுபவர்களாகவும் இருப்பதாகவும், கிட்டத்தட்ட 1.5 மில்லியன் மக்களுக்கு அவசர உணவு உதவி தேவைப்படுவதாகவும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் குறிப்பிடுகின்றது. (அ)

# கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும்

### வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா, செப். 02

கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்னும் தொனிப்பொருளில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையோடு நீதிக்கான மக்கள் அமைப்பினால் ஆர்ப்பாட்டம் ஒன்று வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலுயுறுத்தி இடம்பெற்று வரும் நூறு நாள் செயற்திட்டத்தில் முப்பத்திரண்டாவது நாளான நேற்று வவுனியா பத்தினியார்மகிழங்குளம் முனியப்பர் ஆலயத்துக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தை உடன் நிறுத்து, இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் போன்ற பதாதைகளை ஏந்தியிருந்தனர். (அ)

# ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் கொலை: புலி உறுப்பினர், பொலிஸ் அதிகாரி விடுதலை!

கொழும்பு, செப். 02

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு முக்கிய சந்தேக நபர்களை கம்பஹா மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கம்பஹா முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் கூரே மற்றும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் செல்வராஜா கிருபாகரன் எனப்படும் மொறிஸ் ஆகியோர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உட்பட 16 பேரை 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வெலிவேரிய கண்டி மைதானத்திற்கு அருகில் குண்டுத் தாக்குதல் நடத்திக் கொலை செய்ததாக இரு சந்தேக நபர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அப்போது கம்பஹா பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய லக்ஷ்மன் கூரே இந்த குண்டு வெடிப்புகளுடன் நேரடி தொடர்பு வைத்திருந்தார் என குற்றம் சாட்டி 2009 ஓகஸ்ட் 12 அன்று அவர் கைது செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும், குறித்த கொலை வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேக நபர்கள் இருவரையும் குற்றமற்றவர்கள் என கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார விடுதலை செய்தார். (அ)

# மாணவர்களுக்கு இலவச உணவு வழங்க வெளிநாட்டு உதவி பெறுவது தவறில்லை!

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 02

பாடசாலை மாணவர்களுக்கு இலவச உணவு வழங்குவதற்கு வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் உதவிகளைப் பெறுவதில் தவறில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கு அமெரிக்கா விடம் உதவி கோருவதாக வெளியான செய்திகள் தொடர்பாக தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவை வழங்குமாறு வெளிநாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடம் கோரிக்கையிட தான் தயாராகவுள்ளதாகவும் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து இலங்கைக்கு தங்களால் இயன்றதைச் செய்யுமாறு எதிர்க்கட்சிகளும் கோரிக்கை விடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்க வேளாண்மைத் துறையால் வழங்கப்பட்ட மஞ்சள் பயறு மற்றும் ரின் மீன் விரைவில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

சீனாவில் இருந்தும் இலங்கைக்கு ஒரு தொகை அரிசி நன் கொடையாக கிடைத்ததை அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.00 அணி : இயற்கை வழி




07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மலையாள திரைப்படம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : ஞாழசவ குடைஅ
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி

08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு